விலை : ரூபா 20 .00

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 30 புதன்கிழமை (15.07.2015) | பக்கங்கள் 20 | ஓசை – 287

## தேர்தல் வன்முறை இதுவரை 16 பேர் கைது

(கொழும்பு)

பொலிஸ் தேர்தல் முறைப்பாட்டு பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை விசாரித்ததில் 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் சம்பவம் தொடர்பிலேயே மேற்படி 16 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதிலிருந்து இதுவரை பொலிஸ் தேர்தல் முறைப்பாட்டு பிரிவிற்கு 24 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மாத்தறை மாவட்டத்தில் அதிகளவான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதுடன் குளியாப்பிட்டிய, சிலாபம் மற்றும் பதுளை போன்ற மாவட்டங்களில் குறிப்பிடத்தக்களவு முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## இரகசிய முகாம்கள் உள்ளனவா? விக்கியிடம் விசாரணை வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனிடமும், சில முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் இரகசிய முகாம் பற்றி விசாரணை செய்தால் அதுபற்றி உண்மை வெளிவரும். அத்துடன் இவர்கள் அரசியலுக்காக பேசினார்களா? அல்லது பொய் சொன்னார்களா? என்பது தெரியவரும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று கிறீன்கிறாஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,



காணாமற்போனோர் தொடர்பில் அண்மையில் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் தம்மிடம் இரகசிய முகாம்கள் பற்றிய ஆதாரங்கள் இருப்பதாகத் தெரிவித்தனர். இதற்கு பிரதமர் நேரடியாகவும், நாடாளுமன்றத்திலும் மறுப்புத் தெரிவித்தபோது இவர்கள் மௌனமாக இருந்துள்ளனர்.

தற்போது காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள விசாரணை ஆணைக்குழு இருக்கிறது. இவர்களையும், விசாரணை செய்வதன் மூலம் இவர்கள் தெரிவிப்பதில் உண்மை இருக்கிறதா? பொய் இருக்கிறதா என்பது வெளிவரும் அல்லது அரசியலுக்காக பேசுகிறார்களா என்பது புரியவரும்.

வர இருக்கும் நாடாளுமன்றில் இது தொடர்பான கேள்வியை முதலில் எழுப்ப இருக்கிறேன். ஆதாரங்கள் இருக்கிறதாக கூட்டமைப்பினர் கூறுகின்றார்கள்.

எனவே அரசு இதனை உடனடியாக விசாரணை செய்யக்கூடாது என்ற ஒரு கேள்வி இருக்கிறது. ஏன் காலம் தாழ்த்த வேண்டும்? இவர்கள் அரசியலுக்காக சொன்னார்களா? அல்லது உண்மை இருக்கிறதா? நிரூபிக்கக்கூடிய ஆதாரங்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

# மகிந்தவுக்கு பிரதமர் பதவி கிடையாது



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறப்போவதில்லை. அப்படி வெற்றி பெற்றாலும் கூட மகிந்தவை பிரதமர் பதவியில் அமர்த்துவதற்கு நான் அனுமதிக்கப்போவதில்லை. அந்தப் பதவிக்கு பொருத்தமான சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கட்சியில் உள்ளனர். என்று மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்திருந்தால் 100 நாட்களுக்குள் மக்களுக்கு இத்தனை வசதிகளையும், சலுகைகளையும் வழங்கியிருக்க முடியாது.

ஆனாலும், மிக மோசமானவன், காட்டிக் கொடுப்பவன் என்று என் அளவுக்கு வேறு எந்த ஜனாதிபதியும் விமர்சனங்களுக்கு உள்ளானதில்லை எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து நேற்று நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். துரோகி என்று என்னை விமர்சனம் செய்யும் அளவுக்கு தற்போது நாட்டில் ஜனநாயகம் உள்ளது. மகிந்தவுக்கு வேட்புமனு வழங்கியதற்கு நானும் கடும் எதிர்ப்புத்தெரிவித்தேன்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோற்றதுபோல, மகிந்த பொதுத் தேர்தலிலும் தோல்வியைத் தழுவுவார். இது மகிந்தவின் தவறல்ல. ஜே.ஆர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## எரிபொருள் விலை குறைப்பு மீண்டும்?

(கொழும்பு)

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயுக்களின் விலைகளை மேலும் குறைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

விலை குறைக்கும் முறைமை தொடர்பில் தமக்கு உடனடியாக அறிக்கையொன்றை சமர்ப்பிக்கும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சை வேண்டியுள்ளார்.

## கஞ்சாவுடன் நுழைந்த இந்திய மீனவர்கள் கைது

(மன்னார்)

சட்டவிரோதமான முறையில் இலங்கை கடற்பரப்புக்குள் 165 கிலோ கஞ்சாவை கொண்டு வந்த இந்திய மீனவர்கள் 4 பேர் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் மன்னார் கடற்படையின் பாதுகாப்பில் உள்ளனர் எனவும் மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட படகு மற்றும் மீன்பிடி உபகரணங்களை சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பிள்ளையான் மீது நேற்று விசாரணை

(கொழும்பு)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்)கொழும்பு இரகசிய பொலிஸ் தலைமை அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு மட்டக்களப்பின் கத்தோலிக்க ஆலயமொன்றின் முன்பாக, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பிலான விசாரணை நிமித்தமே அவர் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்கிறார்.

## இந்திய மீனவர்கள் மீது நடுக்கடலில் தாக்குதல்


(கொழும்பு)

இலங்கையர்கள் என்று சந்தேகிக்கப்படும் இனந்தெரியாத குழுவொன்றினால் இந்திய மீனவர்கள் நான்கு பேர் தாக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஞாயிறன்று கொடியக்கரை கடற்பிரதேசத்தில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்குள்ளான இந்திய மீனவர்கள் நான்கு பேரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு

19 ஆம் பக்கம் பார்க்க


லண்டன் சட்டத்தரணி செல்லத்தம்பி சிறீக்கந்தராசா எழுதிய மூன்று நூல்களின் வெளியீடு அண்மையில் யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற போது பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையுரை யாற்றுவதையும் முன்னாள் பேராயர் கலாநிதி க.ஜெபனேசன் நூல்களை வெளியிட அவற்றைத் தொழிலதிபர் எஸ்.பி.சாமி பெற்றுக்கொள்வதையும், நூலாசிரியர் எஸ்.சிறீக்கந்தராசா ஏற்புரை நிகழ்த்துவதையும் காண லாம். (137)

# அளவெட்டி அருணோதயா மரம் முறிந்து சேதம்



அளவெட்டி அருணோதயாக கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கல்வி கற்கும் கட்டடத்தின் மீது நேற்று முன் தினம் இரவு மரம் முறிந்து வீழ்ந்ததினால் கட்டடம் பெரும் சேதமடைந்துள்ளது.

குறிப்பிட்ட கட்டடத்தில் இரவுவேளையில் மரம் முறிந்து வீழ்ந்தமையால் பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பு தவிர்க்கப்பட்டுள்ளது. நீண்ட கால பழமை வாய்ந்த கட்டடமாக காணப்பட்டமையால் பெரிய வாகை மரத்தின் கொப்பு முறிந்து வீழ்ந்ததில் கட்டடத்தின் கூரை சேதம் அடைந்துள்ளதுடன் கட்டடமும் வெடிப்படைந்தது. கல்லூரியில் உரிய வகுப்பறைகள் பற்றாக் குறையாக காணப்படும் நிலையில் தற்போது மரம்முறிந்து வீழ்ந்து கட்டடம் சேதம் அடைந்துள்ளமையால் உரிய ஆரம்ப வகுப்பு மாணவர்களை நேற்று வகுப்பறைகளுக்கு வெளியில் மரங்களின் கீழ் வைத்து ஆசிரியர்கள் கற்பித்தலை மேற்கொண்டுள்ளார்கள்.

உடனடியாக வட மாகாண கல்வித் திணைக்களம் இந்த மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை கருத்திற் கொண்டு புதிய கட்டடத்தை அமைக்க உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கல்லூரியின் பழைய மாணவர்கள் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். சேதமடைந்த வகுப்பறைக் கட்டடத்தை வலிகாமம் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் எஸ்.சந்திரராசா நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

# அமிர்தலிங்கத்திற்கு சிலை வலி.மேற்கு பிரதேசசபை நடவடிக்கை

(வலி.மேற்கு)

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வளவினுள் வடக்கின் பேரபிமானம் பெற்ற மனிதரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அமரர் அப்பாப்பிள்ளை அமர்தலிங்கத்திற்கு சிலை நிறுவப்படவுள்ளது.

சிலை அமைப்பது தொடர்பாக சபையில் ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வலி.மேற்கில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை கௌரவசபை பிரதிநிதிகளும், பொதுமக்களும் மேற்படி சிலை நிறுவுவது தொடர்பாக தொடர்ந்து தம்மிடம் கேள்வி எழுப்பி வருவதாகவும் சிலை நிறுவுவது தொடர்பாக பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகள் தமது கருத்துக்களை முன்வைக்க விரும்பின் இம்மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் தவிசாளர் வலி.மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் எனும் விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு சபையின் தவிசாளர் நா.ஐங்கன் தெரிவித்துள்ளார்.

# பொலிஸாரின் கெடுபிடிகள் வேலணையில் அதிகரிப்பு

(வேலணை)

வேலணைப் பகுதியில் பொலிஸாரின் கெடுபிடிகளால் பொது மக்கள் வீதியில் நடமாடமுடியாத நிலை காணப்பட்டுவருகின்றது.

அண்மை நாட்களாக வீதியூடாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் ஊர்காவற்றுறைப் பொலிஸார், வீதியில் நிற்பவர்களை கடுமையான தொனியில் எச்சரித்து வீட்டுக்கு அனுப்புவதும், அவர்கள் நடுவீதியில் வைத்து உடல் பரிசோதனைக்கு உட்படுவதும், அவர்களின் கைப்பை மற்றும் தொலைபேசிகள் என்பன பரி சோதிக்கப்படுவதும், சிலவேளைகளில் அவர்கள் தாக்குதலுக்குள்ளாகும் நிலையும் காணப்படுகின்றது.

பொழுது சாயும் நேரங்களில் அத்தியாவசிய தேவைக்காக வர்த்தக நிலையங்களுக்குச் செல்வோரும், வேலை முடிந்து வீட்டுக்குச் செல்வோரும் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் பொதுமக்கள் பொலிஸாரின் மீது அதிதிருப்தி நிலையினை அடைந்துவருவதனைக் காணமுடிகின்றது. (21)

# நவாலி நூலகம் விஸ்த்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

நவாலியில் உள்ள மூன்று கிராம அலுவலர் பிரிவில் உள்ள மாணவர்கள், பொதுமக்களின் நன்மை கருதி நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக மற்றும் நூல்நிலையம் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

விசேடமாக உள்ளூர் பத்திரிகைகள் மற்றும் கொழும்பு பத்திரிகை என்பன காலை 8 மணிமுதல் வாசிப்பிற்கு வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி சகலவிதமான நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பத்திரிகைகளின் தொகுப்புக்கள் தொகுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன.

அறிவியல் சார்ந்த ஆராய்ச்சி கட்டுரைகளை எழுதும் மாணவர்கள் ஏனைய வாசகர்கள் இந்நூலகத்தை முழுமையாக பயன்படுத்த முடியும் எனவும் இதனை விட அரசாங்க துறைகளில் போட்டிப்பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களும் இந்நூலகத்தினை முழுமையாக பயன்படுத்தலாம் என நூலகர் சி.தேவராசா தெரிவித்துள்ளார். (92)

# தூய கார்மேல் அன்னையின் ஆலயத்திருவிழா

தூயகார்மேல் அன்னை ஆலயத்திருவிழா நடைபெற்று வருகிறது.

இம்மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமான இத்திருவிழாவில் இன்று ஆன்மீக ஊட்டம் தரும் நற்கருணை என்ற இறைசிந்தனையுடன் திருவிழா இடம்பெறவுள்ளதோடு நாளை அன்னை வழியில் வாழ்வோம்" என்ற சிந்தனையில் இத்திருவிழாவில் இறுதிநாள் விழா இடம்பெறவுள்ளது.

நாளை காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மாலை 5.30 மணிக்கு செபமாலையுடன் திருச்சொரூபபவனி ஆரம்பமாகும். இரவு 7.30 மணிக்கு ஊர்வலம் நி[illegible]டைந்து ஆலயத்தை வந்தடையு[illegible]ன்னை கார்மேல் மாதவன் சொரூப ஆசிர்வழங்கலுடன் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவடையவுள்ளது. (68)

# நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட வீதிகள் திருத்தம்

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபையினால் பல வீதிகள் செப்பனிடப்படவுள்ளன.

கொக்குவில் பிரம்படி வீதி ஒரு மில்லியன் ரூபாவிலும், திருநெல்வேலி வாழைக்குலை சந்தை வீதி 6 இலட்சம் ரூபாவிலும், குளப்பிட்டி பொன்னையா வீதி மற்றும் ஆனைக்கோட்டை அரசடி வீதி என்பன 6 இலட்சம் ரூபாவிலும் திருத்தி அமைக்கப்படவுள்ளன.

கல்வியங்காடு ஆறுமுகம் வீதியும் திருத்தம் செய்யப்படவுள்ளதாக சபை உறுப்பினர் ச.சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

புதிய அரசினால் வழங்கப்பட்ட கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா நிதியிலிருந்தே இவ்வீதிகள் செப்பனிடப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.வசந்தகுமார் குறிப்பிட்டுள்ளார்.

கொக்குவில் ஆயுர்வேத வைத்தியசாலையும் கட்டி முடிக்கப்படவுள்ளது. இதன் திறப்பு விழாவும் விரைவில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)


## அறிவித்தல்

**மொழிபெயர்ப்புக் கற்கை நெறிக்கான உளச்சார்புப் பரீட்சை**

**19.07.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவிருந்த பரீட்சை காலை 11 மணி தொடக்கம் 2 மணி வரை நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன்**

பதிவாளர்

(C/3878)


# பலாலியில் வழிபட அனுமதி

வலிகாமம் வடக்கு பலாலிப் பகுதியில் அமைந்துள்ள இராஜராஜேஸ்வரி ஆலயத்திற்கு சென்று பொதுமக்கள் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இந்துக் கோவில்கள் மற்றும் மீள்குடியேற்றச் சபை அறிவித்துள்ளது.

திருவிழா உபயகாரர்களும் அம்பாள் அடியார்களும் நிர்வாக சபையுடன் தொடர்புகொண்டு கோவிலிற்கு செல்வதற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு மீள்குடியேற்றச் சபையின் தலைவர் த.நவரத்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் 0777552947 0779683981, 0778435608 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறும் ஆலய நிர்வாகம் விடுத்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளின் இன சுத்திகரிப்பே முஸ்லிம்களின் வெளியேற்றம்

## மனம் திறக்கிறார் சுமந்திரன்



(யாழ்ப்பாணம்)


வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றம் விடுதலைப்புலிகளின் இனச்சுத்திகரிப்பே என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்.முஸ்லிம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். எம்.எம்.நிபாஹிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடமாகாணத்தில் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்களை விடுதலைப்புலிகள் 1990 இல் வெளியேற்றியமை இனச்சுத்திகரிப்பாகும். அதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது. அதேநேரம் தமிழ் மக்கள் மீது முன்னைய அரசு மேற்கொண்ட நடவடிக்கை இனப் படுகொலையே ஆனால் சட்ட ரீதியாக அது உ[illegible]டுத் தப்படவில்லை எனத் [illegible]ர்.

யாழ்.வில்லூன்றி, [illegible]சேறி வயல், வேறும் சில இடங்களில் பரம்பரையாக வாழ்ந்த முஸ்லிம்களின் இடங்கள் பறிக்கப்பட்டுள்ளன. உரிமையற்றவர்கள் இவ்விடங்களில் வசிக்கின்றனர் என்றும் அங்காடி வியாபாரிகள் பிரச்சினை பற்றியும் எம்.யூ.எம்.தாஹிர், எஸ்.எம்.சாலிஹ இதன் போது தெரிவித்தார். இப்தார் நிகழ்வில் தமிழ், முஸ்லிம் மக்களும் கலந்து கொண்டனர். (105)

# வீதி புனரமைக்க கோரிக்கை



வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மணியகரன் தோட்ட வீதியிலிருந்து கரணவாய் செல்வாபுரம் மதவடி வரையுமான வீதி அரசின் 100 நாள் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட போதிலும் மீதமாக 50 அடி நீளமான வீதி முழுமையாக புனரமைக்கப்படவில்லை.

இவ் வீதிப் புனரமைப்பிற்கென மக்களின் பங்களிப்பாக 3 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்ட போதிலும் அவ் வீதியினைப் புனரமைப்பதற்கான பணிகள் இதுவரை இடம்பெறவில்லை. இவ்வாறு வீதி புனரமைக்கப்படாமைக்கு வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஒருவரே காரணம் என தெரிவிக்கப்படுகின்றது. 50 அடி நீளமான இவ் வீதிக்கு பதிலாக மற்றொரு வீதியினை புனரமைப்பு செய்வதாக பிரதேச சபையில் முன்மொழியப்பட்ட போதிலும இதுவரையும் அது தொடர்பான நடவடிக்கை எவையும் முன்னெடுக்கப்படவில்லை. (18)

# செயலமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர ரோட்டரிக் கழகத்தால் உயர்தர தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி செயலமர்வு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் இருந்து இந்த ஆண்டு உயர்தர பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்கான செயலமர்வு இன்று தொடக்கம் மூன்று தினங்களுக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெறும். இந்த செயலமர்வு இன்று காலை கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளரால் தொடக்கி வைக்கப்படவுள்ளதால் இதில் அனைத்து மாணவர்களும் தவறாமல் கலந்துகொண்டு பயன்பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கலாசார விழுமிய அபிவிருத்தி 3 இலட்சம் ரூபா நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக கலாசார விழுமியங்களை மேம்படுத்தி, அவற்றை அபிவிருத்தி செய்வதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் தலா 3 இலட்சம் ரூபாய் நிதியுதவியை வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சு வழங்கியுள்ளதாக அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் உஷா சுபலிங்கம் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவித்தார்.

இந்நிதியைக் கொண்டு மேற்கொள்ள வேண்டிய 6 நிகழ்ச்சித் திட்டங்களையும் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்வதற்கான ஒதுக்கீட்டுத் தொகை அளவையும் உள்ளடக்கிய அட்டவணையை நிதியுடன் சேர்த்து அமைச்சு அனுப்பி வைத்துள்ளதாக அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பிரதேச செயலக பிரிவுகளில் அமைந்துள்ள கலை மன்றங்களின் அபிவிருத்தி, கலை அபிவிருத்தி தொடர்பான பயிற்சி வழங்கல், பிரதேசம் சார்ந்த வெளியீடுகள், கலாசார விழாக்கள், கலாசார விழிப்புணர்வுகள், ஆவணப்படுத்தல் ஆகிய 6 நிகழ்ச்சித்திட்டங்கள் இந்நிதி மூலம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# முத்தமிழ் விழா நிகழ்வும் நாடக அரங்கேற்றமும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முத்தமிழ் மன்றம் முன்னெடுக்கும் முத்தமிழ் விழா இன்றும் நாளையும் கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நாடகவிழா நடைபெறும். இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினர்களாக ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் யாழ்.பல்கலைக்கழக கல்வியியற் துறை முதுநிலை விரிவுரையாளர்

கலாநிதி த.கலாமணி கலந்து கொள்வர். நிகழ்வில் கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கத்தின் ஆசியுரை மன்ற உபகாப்பாளர் எஸ்.ஜெயக்குமாரியின் தொடக்கவுரை என்பவற்றைத் தொடர்ந்து நாடக அளிக்கைகள் இடம்பெறும். சிட்டுக்குருவி, சூரியன் நிலவாக, யாரொடு நோகேன், அகல்விளக்கு ஆகிய நாடகங்கள் போட்டி அடிப்படையில் மேடையேறவுள்ளன. முதலாம் நாள் நிறைவு நிகழ்வாக காத்தவராயன் சிந்துநடைக் கூத்து இடம்பெறவுள்ளது. அத்துடன் கலாசாலை ஆசிரிய பயிலுநர்களின் தயாரிப்பாக அமைந்த வற்றுப்பெருக்கு, திருப்பம் குறும்படங்கள் வெளியிடப்பட்டுத் திரையிடப்படும்.

இரண்டாம்நாள் நிகழ்வுகள் நாளை காலை 8.30 மணிக்கு பண்பாட்டு ஊர்வலத்துடன் ஆரம்பமாகும். கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் பிரதம விருந்தினராகவும் கலாசாலையின் ஓய்வு நிலைப் பிரதி அதிபர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு இனிய விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கலாசாலை உப அதிபர் த.கோபாலகிருஷ்ணன், விரிவுரையாளர் குழுமத் தலைவர் வி.எஸ்.குணசீலன் ஆகியோரது வாழ்த்துரைகளும் முத்தமிழ் மன்றக் காப்பாளர் அ.பௌநந்தியின் தொடக்கவுரையும் முத்தமிழ் மன்றத் தலைவர் கு.உதயபாஸ்கரனின் வரவேற்புரையும் இடம்பெறும்.

முத்தமிழ் விழாவையொட்டி நடாத்தப்பட்ட இயல் இசைத்துறை சார்ந்த நிகழ்வுகளில் முதலிடம் பெற்றோரின் ஆற்றுகைகள் மற்றும் தாருகாவன முனிவர்கள் என்ற பொருளில் அமைந்த நாட்டிய நாடகம், பாஞ்சாலி சபதம் என்ற பொருளில் அமைந்த நாட்டுக் கூத்து என்பனவும் இடம்பெறவுள்ளன.

# வருடாந்த திருவிழா

(கிளாலி)

வரலாற்றுச் சிறப்புமிக்க கிளாலி தூய சந்தியோகுமையோர் யாத்திரைத்தல திருவிழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 04.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து ஆயத்த வழிபாடுகள் 19 ஆம் திகதி முதல் தினமும் பிற்பகல் 04.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.

நற்கருணைப் பெருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கும் திருவிழாத் திருப்பலி இம்மாதம் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து புனிதரின் திருச்சொரூப பவனியும் திருச்சொரூப ஆசீர்வாதமும் இடம்பெறும் என பங்குத்தந்தை அருள்திரு அ.ஜெ.அ.ஜெயரஞ்சன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இத்திருத்தல திருவிழாவிற்கு குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து பெருமளவு பக்தர்கள் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.







யாழ்.மாவட்ட புனர்வாழ்வு இணைப்பு காரியாலயத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான புகைத்தல் மற்றும் போதைப் பொருள் பாவனையின் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு நேற்று யாழ்.மத்தியகல்லூரியில் இடம்பெற்ற போது... (படங்கள்: ஆர்.இராஜகுமார்)

ஆணவத்தின் பாதை தொடங்கும்போது அழிவின் பயணமும் ஆரம்பமாகிறது. - அன்புவழியூர் புலவர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இங்கும் மாற்றம் ஒன்று வரும்!

யாழ் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தப் பொதுத் தேர்தலில் பாதிப் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கே வாய்ப்பிருப்பதாக பலரும் எழுதுகிறார்கள் பேசுகிறார்கள்.

அதாவது யாழ்ப்பாணத்திற்கான மொத்தம் ஏழு பிரதிநிதித்துவத்தில் கூட்டமைப்புக்கு மூன்று 'சீற்' தான் பெரும்பாலும் கிடைக்கலாம் என்றும், அதை நாலாக்கிக் கொள்வதற்கு பழைய தேர்தல்களைப் போல இம்முறையும் மக்களைப் பயங்கரத்தில் ஆழ்த்தும் கடைசிநேரக் கதறல் நாடகக் காட்சிகளின் அரங்கேற்றம் கூட்டமைப்புக்கு உதவுமா என்ற கேள்வி பலருக்கும் எழுந்திருக்கிறது.

அதில் சிக்கல் என்னவென்றால், இம்முறை இராணுவத்தினரைச் சீண்டி, "ஐயோ, அரச படைகளும் அதன் ஒட்டுப் படைகளும் தாக்குகிறார்கள்; நம் போன்ற அகிம்சாமூர்த்திகள் மரண பயங்கரத்தினுள் வாழ வேண்டியிருக்கிறதே...." என்ற ஒப்பாரி இம்முறை எடுபடாது என்பதுதான்!

"கடந்த வாரம் வரை ஆட்சியில் இருந்தது நாங்கள் கொண்டு வந்த நல்லாட்சி தான்; இந்தத் தேர்தலுக்குப் பின் இணக்க அரசியல் மூலம் தீர்வை எடுப்பதற்கு அரசுடனும் ஜனாதிபதியுடனும் பேசி உத்தரவாதங்களும் பெற்றிருக்கிறோம்" என்று சொல்லிக்கொண்டு, அரசின் தேசிய நிறைவேற்று சபையிலும் முந்தாநேத்து வரை இருந்துவிட்டு –

இப்போது "ஐயோ இராணுவத்தினர் அடிக்கிறார்கள்" என்று கூட்டமைப்பினரும் அவர்களது ஊடகங்களும் நீலிக்கண்ணீர் விட்டுக் கதற முடியாது. அதை யாரும் நம்பவும் மாட்டார்கள்.

எனவே இந்தமுறை தேர்தலில், "வன்முறையின் வாயகப் பட்டுக் கதறும் புனித ஆத்மாக்களின் அபலைப் புலம்பல்" நாடகத்தைப் போட்டு மக்களை உணர்ச்சிகரமாய் ஏமாற்றுவதற்கு எந்த வாய்ப்புமில்லை.

ஆனாலும், கடந்த தேர்தல் வெற்றிக்குப் பிறகு நாங்கள் மக்களுக்காக இன்னின்னவற்றைச் செய்தோம் என்று ஒரு விரலைத் தன்னும் மடித்துச் சொல்ல ஒன்றுமில்லை என்பதால் –

ஊடகப் பொய்கள் மூலம் எதிர்க்கட்சிகள் மீதான பாய்ச்சலை நடத்திக் காட்டியும், வெறுப்பேற்றும் பகைப் பேச்சுக்களாலும் தான் உணர்ச்சிகர ஏமாற்றுச் சூழலை வலிந்து உருவாக்கி வாக்குகள் சேகரிக்க வேண்டும்.

அதற்கான பொய் சோடனைகளுக்கு தமிழரசுக் கட்சி ஊடகங்கள் தயாராகி விட்டதாகவே தெரிகிறது. மக்களை ஏமாற்றும் அடாவடித் தலைப்புகளுக்கும் நேற்றே அரங்கேற்றம் நடந்து விட்டது.

இவர்கள் பத்திரிகையை லாபத்தில் நடத்தவும், மற்றும் அவரவர் வியாபாரங்களை விருத்தி செய்து கொள்ளவும், தங்கள் பிள்ளைகளுக்கும் உறவுக்காரர்களுக்கும் பின்கதவால் தென்னிலங்கை அரச தலைவர்களிடம் – அமைச்சர்களிடம் பேசி பதவிகளும் புலமைப் பரிசில்களும் பெற்றுக் கொள்ள வேண்டித்தான் எம்பிப் பதவிகளை இவர்கள் தொடர்ந்து பெற்றுக்கொண்டு வருகிறார்கள்.

மக்களுக்கு எதைப் பெற்றுக் கொடுத்தார்கள் என்பதைச் சொல்லி இவர்கள் வாக்குக் கேட்பதில்லை என்பதிலிருந்தே இந்தக் கூட்டமைப்பு எம்பிக்களின் வண்டவாளத்தைப் புரிந்து கொள்ளலாம்.

தென்னிலங்கைக் கட்சிகளை ஒருபாட்டம் திட்டி, இங்குள்ள எதிரிக் கட்சிகளையும் துரோகிகள் என்று வசைபாடி விட்டு, ஒன்றுதிரண்டு வாக்களித்து ஒற்றுமையைக் காட்டினால்தான் உங்களுக்கு கதிமோட்சம், இல்லையேல் தொலைந்தீர்கள் என்று ஒரு வெருட்டு வெருட்டினால் தமிழ் மக்கள் கியூவில் வந்து வாக்களிப்பார்கள் என்றுதான் கூட்டமைப்பினர் இப்போதும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தேர்தலில் மக்கள் அவர்களுக்கு சிலவற்றைப் புரிய வைப்பார்கள்! - ஆசிரியர்

## ஜாதிக ஹெல உறுமய போன்று பௌத்த மதத்தை சீரழித்தவர்கள் இல்லை

### துறவிகளின் குரல் குற்றச்சாட்டு

இந்த நாட்டில் ஜாதிக ஹெல உறுமய போன்று பௌத்த மதத்தை சீரழித்தவர்கள் எவரும் கிடையாது என்று 'துறவிகளின் குரல் அமைப்பின் ஆலோசகர் வணக்கத்திற்குரிய பொங் கமுவே நாளகதேரர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கு நாடுகளின் பணத்துக்கு அடிமைப்பட்டு நாட்டின் தேசியத்துவத்தை சீரழித்துள்ளதாக நேற்று நாரஹேன்பிட்டியில இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பொங்கமுவே நாளக தேரர் தெரிவித்தார்.

நாட்டுக்காக மகிந்தவா அல்லது வயிற்றுக்காக ரணிலா என்று இந்த முறை தேர்தலில் மக்கள் தீர்மானிக்க வேண்டும் என்று அவர மேலும் தெரிவித்தார்.

இந்தமுறை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் கட்சி மாறுவதில்லை என்று மக்கள் உறுதிமொழி ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறு கட்சி மாறுவது ஜனநாயக விரோத செயற்பாடு என்றும் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவிற்கெதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இருந்தாலும் எந்தவொன்றும் நிரூபிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் மேர்வின் சில்வா மற்றும் ரணில் விக்ரம சிங்க போன்றோர் மீது எந்தவொரு சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளாமையே மகிந்த ராஜ பக்ஷ செய்த தவறாகும் என்று 'துறவிகளின் குரல்' அமைப்பின ஆலோசகர் வணக்கத்திற்குரிய பொங்கமுவே நாளகதேரர் குறிப்பிட்டுள்ளார்.

## ஐக்கிய தேசியக் கட்சி மிகப்பெரிய வெற்றியைப் பெறும்

### நீதியமைச்சர் நம்பிக்கை

1977 ஆம் ஆண்டினைப் போன்று இம்முறை ஐக்கிய தேசியக் கட்சி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுக் கொள்ளும் என நீதியமைச்சர் விஜயதாஸ் ராஜபக்ஷ குறிப்பிடுகின்றார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான கொழும்பு மாவட்ட வேட்பு மனுவை நேற்று மாவட்ட செயலத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில், ஐக்கிய தேசியக் கட்சியானது கொழும்பு மாவட்டம் உட்பட 22 மாவட்டங்களிலும் வேட்பு மனுக்களை மிகவும் வெற்றிகரமாக தாக்கல் செய்துள்ளது. கொழும்பு மாவட்டதில் 19 ஆசனங்களில் 13 ஆசனங்களை நாம் நிச்சியமாக வெற்றிகொள்வோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியானது பெண்கள் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம், ஊழல், மோசடி, போதைப்பொருள்கடத்தல், அடிதடி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு மீண்டும் வேட்புமனு வழங்கியுள்ளது. இதனால் ஐக்கிய தேசியக் கட்சியாகிய நாம் 1977 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டதனைப் போன்று விசேட வெற்றியைப் பெற்றுக் கொள்வோம் என்று மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கின்றேன்.' என்றும் கூறினார்.

## மீண்டுமொரு வரலாற்றுத் தவறை மைத்திரி செய்யக் கூடாது

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மீள் அரசியல் பிரவேசத்திற்கு கட்சியில் இடமளித்ததன் மூலம் பாரிய வரலாற்றுத் தவறினை மீண்டுமொருமுறை மேற்கொள்ளக்கூடாது. என்று பிரஜைகள் அமைப்பு ஜனாதிபதி மைத்திரியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜனநாயக பிரஜைகள் அமைபபின் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைப்பாளர் சமன்த ரத்னப்பிரிய இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகார ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து நல்லாட்சியை ஏற்படுத்தவே மூவின மக்களும் வாக்களித்ததாக அவர் சுட்டிக் காட்டினார்.

எனினும் ஜனாதிபதி மைத்திரிபாலமீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை வீணடிக்கப்பட்டு விட்டதாக. ரத்னப் பிரிய சுட்டிக்காட்டினார்.

எனவே இந்தத் தேர்தலில் ஒரு கட்சிக்காகவோ அல்லது ஒரு வேட்பாளருக்காகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேரதல் பிரசாரத்தில் ஈடுபடக்கூடாது என்று பிரஜைகள் அமைப்பு தெரிவித்தது.

அவ்வாறு செய்வதன் ஊடாக மீண்டும் ஒரு வரலாற்றுத் தவறை மைத்திரிபால சிறிசேன செய்துவிடக்கூடாது 'என்றார் ரத்னபிரிய. சர்வாதிகாரம் மற்றும் ஊழல் நடவடிக்கைகளுக்காக மகிந்த ராஜபக்ஷவுக்கு மக்கள் தக்க பதிலடி கொடுப்பார்கள் 'என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

## ஷிராணியின் மகன் கொழும்பில் போட்டி

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் மகன் ஷவின் பண்டாரநாயக்க காரியவசமும் இம்முறை தேர்தலில், கொழும்பு மாவட்டத்தில் சுயேட்சையாக போட்டியிடுகின்றார்.

எமக்கு அரசியல் தேவையில்லை, பொது மக்களுக்கு சேவை செய்யவே வந்துள்ளேன எனவும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது பேஸ்புக்கில் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு, 'உங்களுக்கும எனக்கும் நடைமுறையிலுள்ள தேர்தல் முறையைவிட மாற்றியமைக்கப்பட்ட அரசியல் கலாசாரம் வேண்டும். திறமையான, சுத்தமான மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றம் செல்ல வேண்டும். இதனை உங்களுக்கோ அல்லது எமக்காகவோ செய்யமுடியாது போனாலும் எதிர்கால சந்ததியினருக்கு கிடைக்கப் பெறவேண்டும

நாம் மேற்கொண்டுள்ள பயணம் நீண்டதும் கடினமானதுமாகும். அது எங்கேயோ ஆரம்பமாகி உள்ளது. எங்களுக்கு அவசியமானது அரசியல் அல்ல, பொதுமக்களின் சேவையே' எனக் கூறியுள்ளார்.

## யால சரணாலயத்தில் கைத்தொலைபேசிக் கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)


யால தேசிய சரணாலயத்திற்குள் கையடக்கத்தொலைபேசி பாவனையை கட்டுப்படுத்துவதற்கான விஷேட நடவடிக்கையொன்றை மேற்கொள்ள வனஜீவராசிகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

வன விலங்குகளுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜெனரல் எச். டீ. ரத்னாயக்க தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தை நடைமுறைபடுத்துவதற்கு முன்னதாக எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் ஒரு வார காலத்திற்கு ஒத்திகை பார்க்க உள்ளதாக அந்த திணைகளம் குறிப்பிட்டுள்ளது.

விஷேடமாக வனவிலங்குகளை அதிகம் காணக் கூடிய நேரங்களான காலை 6 மணி முதல் 9 மணி வரை மற்றும் பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரையான காலப்பகுதியில் இந்த வேலைத திட்டம் நடைமுறைப்படுத்தப் படும். இந்த திட்டத்தினூடாக யால தேசிய சரணாலயத்திற்குள் குறித்த காலப்பகுதியில் கையடக்கத் தொலைபேசிச் சேவைகளின் தொடர்புகள் துணடிக்கப்படவுள்ளது.

இதுதொடர்பான பேச்சு வார்த்தைகளை அனைத்து தொலைத் தொடர்பு நிறுவனங்களுடனும் மேற்கொண்டிருப்பதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜெனரல் எச்.டீ.ரத்னாயக்க தெரிவித்தார்.



# மைத்திரி - மகிந்த - ரணில் - சந்திரிகா சமன்பாடு மீண்டும் ஒழுங்கு படுத்தப்படுகிறது

தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து

ஜனாதிபதி சிறிசேனவுக்கும் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கும் இடையிலான இடைவெளியை குறுக வைத்தது யார்? ஜனவரி 8இல் இடம்பெற்ற அமைதியான ஆட்சி மாற்றத்தை ஆதரித்த வெளிக் கூட்ட ணியின் விருப்பத்தை புறக்கணிக்க யாருடைய வலிமையான மற்றும் திற மையான முயற்சிகள் பின்துணை நல் கின. அது ஸ்ரீ.ல.சு.க நிறுவனமா? அதா வது உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் யுத்த வீரர்களா? அது பசில் ராஜபக்ஷவா? பௌத்த சங்கமா, அல்லது அது சீனாவின் முயற்சியாக இருக்குமா?

உண்மையில் இவைகள் இல்லை. அது பிரதம மந்திரி ரணில் விக்கிரம சிங்கவே தான், அவர் பதவி வகித்த குறுகிய காலத்தில் அவரது அரசியல் நடத்தைகள் மிகவும் முனைவாக்கம் அடைந்திருந்தன, அது ஜனாதிபதி சிறிசேனவுக்கு அவருக்கு கீழே உள்ள களத்தில் மாற்றம் ஏற்படுத்தும் உணர்வைத் தூண்டியது, நிலைமையை பழையபடி சீராக்க வேண்டிய கட்டாயத்துக்கு அவர் தள்ளப்பட்டார்.

உண்மையில் ரணில் விக்கிரமசிங்க அதை முன்னரும் செய்திருந்தார். 2001இல் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பின் அப்படியான திமிர் பிடித்த தேசிய விரோத மற்றும் முனைவாக்க முறையில் செயற்பட்டார், அத்தகைய தேசிய வாத எதிர்விளைவு மற்றும் மத்திய இடது நாட்டுப் பற்றுள்ள குழுவி-னரான ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீ.ல.சு.க என்பனவற்றின் அழுத்தம் முந்தைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவினால் அவரை தூக்கி எறிய வைத்தது.

அப்போது அது சந்திரிகா, இந்த முறை அது மைத்திரி. பின்னவர் அவரைத் தூக்கி எறியவில்லை ஆனால் மனமின்றியேனும் ஸ்ரீ.ல.சு.க வையும் அதேபோல் ரணில் விரோத சக்தி களையும் ஒன்றுபடுத்த ஒப்புதலை வழங்கினார், அதேபோல மகிந்த ராஜபக்ஷவை ஸ்ரீ.ல.சு.க மேடையின் மையத்துக்கு திரும்புவதற்கும் கையெழுத் திட்டார், இதன்மூலம் கிட்டத்தட்ட ரணில் விக்கிரமசிங்காவின் தோல்விக்கு உத்தரவாதம் வழங்கியுள்ளார்.

2001 - 2003 காலத்து அழிவுமிக்க அனுபவத்திலிருந்து ஒரு பாடத்தைக் கற்காமல் முந்தைய தருணத்தை விட மிகவும் பலவீனமான (சிறுபான்மை) அரசாங்கத்துக்கு தலைமையேற்றுக் கொண்டு ரணில் பல முனைகளிலும் முற்றிலும் தவறான திசையில் மிக வேகமாக அதிக தூரம் சென்றார். அவரது நடத்தைக்கு வெறித்தனமான மேற்கு சார்பான கொள்கையுடைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் அதற்குச் சமமான வடக்கு முன்னணி ரி.என்.ஏயின் திறமை சாலியான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கடுமையான சாகசச் செயல்களை நிகழ்த்தும் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் போன்றோரது வெளிக் கூட்டணியும் துணை செய்தது.

ஒரு சிறுபான்மை அரசாங்கத்துக்கு பொருத்தமான வகையில் அறிவுள்ள எந்த பழமைவாதியும் அணுகக்கூடிய படிப்படியான எச்சரிக்கை மிக்க கருத் தொற்றுமையை அணுகுவதற்கு மாறாக ரணில், அவரது ஐ.தே.க. மற்றும் ரி.என்.ஏ கூட்டு ஒரு அதிர்ச்சி வைத்தியம் மற்றும் வைராக்கியமான மறுபிரவேச ஏற்பாடுகளைச் செய்ய முயன்றது.

இந்த புனிதமற்ற கூட்டணி மற்றும் அதன் சாகசத் தன்மைகளை, கொழும்பு உயரடுக்கு சிவில் சமூகக் குழு ஒன்று பக்கவாட்டில் இருந்து உற்சாகமூட்டிக் கொண்டிருந்தது - வேரறுக்கும் ஒரு அடுக்கு, அதன் சொந்த வழங்கல் மிகவும் உயர்வானது, அதனால் அதன் காலடியின் கீழுள்ள ஏராளமான பிரபலம்பெற்ற தேசியவாத வெகுஜன இயக்கங்களின் குரல்களின் ஆழத்தை உணர அல்லது கேட்க முடியவில்லை.

ரணிலின் நல்லாட்சியின் ஒரு விளைவு கலப்படமற்ற மோசமான பொருளாதார ஆட்சி - பிணைப் பத்திர ஊழல், பொருளாதார அபிவிருத்தி முன்னணி யின் தேக்கம், உள்நாட்டு பணத்தின் மதிப்பிறக்கம் மற்றும் வேலை வாய்ப் பின்மை என்பன அதில் அடங்கும். மற்றைய விளைவு நாட்டுப்பற்றுள்ள - தேசியவாதத்தின் பின்னடைவு.

பொதுமக்களின் எண்ணத்தில் ஏற் பட்டுள்ள மாற்றத்தை ஜனாதிபதி சிறி சேன தான் ஆட்சி செய்தவர்கள் மற்றும் சிங்கள மையப்பகுதியில் உள்ள வெகுஜன சக்திகள் என்பன வற்றின் மூலமாக உணர்ந்து கொண்டார். மேலும் தனது சொந்தக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடித் தளத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தையும் அவரால் உணர முடிந்தது.

அந்த அடித்தளத்தை திரும்பக் கைப்பற்ற அவர் நகருகிறார், ஆனால் அப்படிச் செய்வதற்கு அதை அவர் அதன் பிரதான குடியிருப்பாளரான மகிந்த ராஜபக்ஷவுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியுள்ளது. அப்படிச் செய்வதனால் ஜனவரி 8இல் அவருக்கு வழங்கப்பட்ட ஆணையை காட்டிக் கொடுத்துவிட்டாரா? தவிரவும் அந்த ஆணை எப்படிப்பட்டது என்று நீங்கள் நினைப்பதை பொறுத்தும் உள்ளது - அது நல்லதா அல்லது கெட்டதா? - மற்றும் அது முழுமையாக நிறை வேற்றப்பட்டதா அல்லது இல்லையா?

ஜனவரி 8 ஆம் திகதிய ஆணையின் முற்போக்கான சம்பவம், 19ஆவது திருத்தத்தின் இறுதியான மற்றும் மிதமான வடிவத்தில் நிறைவேற்றியதுதான் என்று என்னால் வாதிக்க முடியும் - நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்க முடியாமல் அதை பற்றாக்குறையாக பாதி கட்டிய வீடுபோல் வரையறை செய்து 'அரைகுறையாக வடிவமைத்து ஐ.தே.க. சாதனை படைத்துள்ளது.

ஆணையின் அந்தப் பகுதி என்ன வடக்கு மற்றும் தெற்கு இடையி லான போருக்குப் பின்னான அரசியல்

**இடது மைய ஸ்ரீ.ல.சு.க வேட்பாளர்களால் ரணில் இரண்டுமுறை தோற்கடிக்கப்பட்டுள்ளார், 1999இல் சந்திரிகாவினாலும் மற்றும் 2005இல் மகிந்தவினாலும். இதை வேறுவிதமாகப் பார்த்தால் ஒவ்வொரு முறையும் ரணில் இடது மைய ஸ்ரீ.ல.சு.க வேட்பாளர்களுக்கு முகம் கொடுக்கும் போதெல்லாம் அவர் தோல்வி அடைந்துள்ளார், மற்றும் ஐ.தே.க. அவரை அத்தகைய ஆட்களுக்கு எதிராக நிறுத்தும் போதெல்லாம் ஐ.தே.க. தோல்வியடைந்து ஸ்ரீ.ல.சு.க வெற்றி பெற்றுள்ளது. மூன்றாவது முறையாக அவருக்கு அதிர்ஷ்டம் கிடைக்கும் சாத்தியம் இல்லை.**

நல்லிணக்கமா என்று ஒருவர் கேட்கலாம்? சிங்களப் பெரும்பான்மை யினரின் பரந்த ஆதரவு இல்லாவிட்டால் இன நல்லிணக்கம் அசாத்தியம். அது ரணிலைப் போன்ற ஒரு தலைவரின் நிருவாகத்தால் முன் கொண்டுவர முடியாது. இது 2001 - 2003இல் கற்றுக்கொண்ட பாடங்களில் ஒன்று.

எனவே தெற்கு மற்றும் வடக்கிற்கான நிலையான அரசியல் நல்லிணக்கத் துக்கு ஒரு முன்நிபந்தனையாக சிங்கள தேசியவாதத்தின் இரண்டு போக்குகளாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு இறக்கைகளாக உதாரணம் காட்டப்படும் ஜனாதிபதி சிறிசேனவினால் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் தாராளமய ஜனநாயக சீர்திருத்தவாதிகள் மற்றும் வெகுஜன தேசியவாதத்தை பிரதிநிதிப்படுத்தும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரும் அவசியம் தேவைப்படுகிறார்கள்.

மேலும் முறையான ஒரு கருத்தின்படி, ஜனாதிபதி சிறிசேன வலதுசாரியை நோக்கி தனது உள்நாட்டு, இன மற்றும் வெளிப்புறக் கொள்கைகளில் அதிக தூரம் இழுபடும் பிரதமர் விக்கிரம சிங்காவிடம் இருந்து ஒரு தூரத்தை கடைப்பிடிப்பது ஒரு சிறப்புமிக்க அறிவுபூர்வமானதாகவே தோன்றுகிறது. ரணிலின் பகுதி இணைப்பை துண்டித்து தயக்கமுடன் மகிந்த ராஜபக்ஷவுக்கு மீள் ஒத்துழைப்பு வழங்குவதுதான் சமன்பாட்டை மீள் சமநிலைப்படுத்தி மிகவும் முக்கியமான நடுப்பகுதிக்கு மீண்டும் வருவதுதான் ஜனாதிபதி சிறிசேனவுக்கு உள்ள ஒரே வழி. அவற் றில் பெரும் பாலானவற்றை இழப்ப தற்குப் பதிலாக மகிந்த ராஜபக்ஷவை ஏற்றுக்கொண்டு ஸ்ரீ.ல.சு.க்வை மீள் ஐக்கியப்படுத்தும் மூலோபாய நகர்வு மூலம் ஜனாதிபதி சிறிசேன தன்னை நாட்டின் இதயப் பகுதியில் மிகவும் பிரபலமாக்கிக் கொண்டுள்ளார்.

அப்போது மற்றொரு முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் நிலை என்ன? அவர் ரணில் விக்கிர மசிங்காவை ஜனாதிபதி வேட்பாளரின் இடத்திலிருந்து வெளியே நகர்த்தி மற்றும் பொது வேட்பாளராக மைத்திரி பால சிறிசேனவை போட்டிக்கு நிறுத்துவதற்கு இனிமையாக பேசி சமாளிப்பதற்கு ஒரு செயல்திறன் மிக்க கையாகப் பங்காற்றியுள்ளார். அது முதல் அவர் தோற்றுப் போனார், ஏனெனில் அவருக்கு ஒருமுகப் படுத்தும் தன்மை குறைவு மற்றும் அதற்கான காரணம் அவரது சொந்த சித்தாந்தங்களில் குழப்பமும் மற்றும் அரசியல் நிலையற்ற தன்மையுமே காரணம். அவர் ரணிலை ஒரு இறுக்கமான கட்டுக்குள் வைத் திருந்திருக்கலாம், ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. மாறாக அவர் ஜனாதிபதி சிறிசேனவை இறுக்கமான கட்டுக்குள் வைக்க முயற்சித்து ரணிலின் விளையாட்டை நடத்தினார். அப்படி செய்ததினால் மைத்திரிபால மீதான அவரது சொந்த பயன்பாடுகள் மற்றும் கோரிக்கைகள் குறைவடைந்து போயின. சுருங்கச் சொன்னால் ஜனாதிபதிக்கும் மற்றும் ஸ்ரீ.ல.சு.க பதவியில் உள்ளவர்களுக்கும் மற்றும் பௌத்த சிங்கள வெகுஜனங் களுக்கும் கூடுமானளவு அவர் ஒரு சொத் தாக இல்லாமல் சுமையாகிப் போனார்.

இடது மைய ஸ்ரீ.ல.சு.க வேட்பாளர்களால் ரணில் இரண்டுமுறை தோற்கடிக்கப் பட்டுள்ளார், 1999இல் சந்திரிகாவினா லும் மற்றும் 2005இல் மகிந்தவினாலும். இதை வேறுவிதமாகப் பார்த்தால் ஒவ்வொரு முறையும் ரணில் இடது மைய ஸ்ரீ.ல.சு.க வேட்பாளர்களுக்கு முகம் கொடுக்கும் போதெல்லாம் அவர் தோல்வி அடைந்துள்ளார், மற்றும் ஐ.தே.க. அவரை அத்தகைய ஆட்களுக்கு எதிராக நிறுத்தும் போதெல்லாம் ஐ.தே.க. தோல்வி யடைந்து ஸ்ரீ.ல.சு.க வெற்றி பெற்றுள் ளது. மூன்றாவது முறையாக அவ ருக்கு அதிர்ஷ்டம் கிடைக்கும் சாத்தி யம் இல்லை. ரணில் 2005இல் மகிந்தவுக்கு எதிராகப் போட்டியிட்டு தோல்வியடைந்தார் மற்றும் 2010 மற்றும் 2015 ஆகிய இருமுறையும் அவர் போட்டியை தவிர்த்தார். அவர் ஒளிவதற்கு இடமில்லாததால் இப்போது வளையத்தில் மகிந்தவுக்கு எதிராக திரும்பவும் வந்துள்ளார்.

இந்தக் காலகட்டத்தில் ரணில் விக்கிர மசிங்காவின் நிருவாகம் பல அர்த்தத் திலும் மற்றும் பரிமாணத்திலும் ஒரு சிறுபான்மை அரசாங்கமாக இருந்தது. இந்தத் தேர்தலில் அது தூக்கியெறியப் படப் போகிறது, அது ஏற்கனவே தயார் படுத்தப் பட்டுவிட்டது, ஜனாதிபதி சிறிசேன இது நிறைவேறப் போவதைக் காணப்போகிறார். இல்லாவிட்டால் ஏன் அவர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது வெகுஜன இயக்கத்துடன் நல்லிணக்க கொள்கையை மாற்றிக் கொண்டுள்ளார்? ஜனாதிபதி சிறி சேன மிகவும் பத்திசாலித் தனமாக மிகவும் விவேகத்துடன் தனது வழியை விட்டு வேகமாக விலகி குறைந் தது இன்னும் ஆறு வாரங்களில் வரவுள்ள தேர்தல் சுனாமி மற்றும் சமூகப் பெரு மாற்றங் களுக்கு ஈடு கொடுக்கத்தக்க தாக தன்னை பாதுகாப்பாக நிலை நிறுத்திக் கொண்டுள்ளார். 1956இல் நடந்த மிகப் பெரிய மாற்றத்தைப் போல வேரற்ற பட்டணத்து மேட்டுக் குடி உயரடுக்கினரின் முழு திட்டமும் தூக்கி வீசப்பட்டப் போகிறது.

# சுதந்திரக் கட்சியின் வெற்றிக்காகவே செயற்படுவார் ஜனாதிபதி சிறிசேன

## பிரதியமைச்சர் சிறிபால கம்லத் நம்பிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக்காகவே செயற படுவார் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின பொல னறுவை மாவட்ட அமைப்பாள ரும், பிரதி அமைச்சருமான சிறி பால கம்லத் தெரிவித்துள்ளார்.

வேட்பு மனுத் தாக்கல் செய்த பின்னர் ஊடகவியலா ளர்களுக்கு கருத்து தெரிவித்த அவர ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன 49 வருடங்கள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கின்றார். நீண்ட காலம் கட்சியின் செயலாள ராக இருந்த அவர், தற் பொழுது அதன தலைவராக உள்ளார்.

கட்சியின் தலைவராக உள்ள அவர் ஒரு போதும் வேறொரு கட்சியின் வெற்றிக்காக செயற் பட மாட்டார்.

மேலும் இந்த தேர்தல் வெற்றியின் பின்னர் நாம் ஒரு பலம் மிக்க நாடாளுமன்றத்தை அமைப்போம்.

அதனூடாக நாம் எதிர் கால சந்ததியினருக்காக மீண் டும் எமது அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிப்போம் எனத் தெரிவித்தார்.

# சிங்கள மக்களுக்காக நாடாளுமன்றம் செல்வோம்

## பொதுஜன பெரமுன சூளுரை

(கொழும்பு)

சிங்கள மக்களின் உரிமைக் காக குரல்கொடுப்பதற்காக நாம் நாடாளுமன்றம் செல்வோமென, பொதுபல சேனா அமைப்பின் அரசியல் கட்சியான பொதுஜன பெரமுன் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் கொழும்பு மாவட்டத் தில் போட்டியிடுவதற்காக, நேற்றுமுன்தினம் காலை வேட்பு மனு தாக்கல் செய்த அக் கட்சி யின் செயலாளர் விதாரந்தெனிய நந்த தேரர் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

தற்போது சிங்கள மக்களின் பாதுகாப்பு சூனியமாக்கப்பட் டுள்ளதாகத் தெரிவித்த அவர், அது நடைபெறாதிருக்கவே தாம் தேர் தலில் போட்டியிடவுள்ளதாக மேலும் தெரிவித்தார்.

கடும் இனவாதப் போக்கை கடைப்பிடித்துவந்த பொதுபல சேனா அமைப்பானது, கடந்த காலங்களில் தமிழ் - சிங்கள மக்களுக்கெதிராக செயற்பட்டு வந்தது. இந்நிலையில், தற்போது சிங்கள மக்களுக்காக நாடாளு மன்றிலும் குரல்கொடுக்கப் போவதாகத் தெரிவித்துள்ளது. பொதுபல சேனா அமைப்பு ஆரம பிக்கப்பட்டு இரண்டு வருடங்க ளாகியுள்ள நிலையில், அந்த அமைப்பின் முதலாவது அரசி யல் பிரவேசம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# குருநாகலில் மகிந்தவை படுதோல்வியடையச் செய்வோம்

## சூளுரைக்கிறார் நாவின்ன

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை குருனாகல் மாவட டத்தில் படுதோல்வி அடையச் செய்வோம் என அமைச்சர் எஸ். பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செயத தன் பின்னர் கொழும்பு ஊடக மொன்றுக்கு கருத்து வெளியிடட போது அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்ததனைப் போன்றே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரான நான் குருனா கல் மாவட்டத்தில் மகிந்தவை படுதோல்வி அடையச் செய்வேன்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பாரிய வெற்றியை ஈட்டும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த வுக்கு மறக்க முடியாத பாடம் ஒன்றை கற்பித்தே இம்முறை ஐக்கிய தேசியக் கட்சி குருனா கல் மாவட்டத்தில் வெற்றியீட்டும் எங்களது வெற்றியை தடுக்க தேவந் திரர்களினால் கூட முடியாது.

அம்பாந்தோட்டை மக்க ளுக்கு அஞ்சி குருனாகலில் இலகு வெற்றியீட்ட முடியும் எனக் கருதி மகிந்த வேட்பு மனுத்தாக் கல் செய்துள்ளார்.

எனினும் மகிந்தவுக்காக கொடி போடக்கூட எவரையும் தேடிக கொள்ள முடியாத நிலை மை காணப்படுகின்றது என எஸ்பி நாவின்ன் தெரிவித்துள்ளார்.



# மகிந்தவுக்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை

## கூறுகிறார் ஹிஸ்புல்லா

(கொழும்பு)

எங்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை என்று முன்னாள் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில், மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் முன்னாள் பிரதி அமைச்சர் ஹிஸ் புல்லா மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள் ளையான் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு பேட்டி யளித்த ஹிஸ்புல்லா மகிந்த ராஜபக்ஷவோடு தங்களுக்கு எந்த தொடர்பும் இல்லை என்று கூறினார்.

அத்துடன் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவே கட்சியின் தலைவர் என்றும் அவரது வழிகாட்டலில் போட டியிட்டு ஆட்சி அமைக்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# பட்டுப்பாதை கூட்டுப் பயிற்சி நிறைவு



இலங்கை - சீன கொமாண்டோக்கள் இணைந்து நடாத்தி வந்த பட்டுப்பாதை -2015 கூட்டுப் பயிற்சியின் இரண்டாவது கட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இந்தக் கூட்டுப் பயிற்சியின் நிறைவு நாள் நிகழ்வு நேற்றுமுன் தினம் மாதுறுஓயாவில் உள்ள சிறப்புப்படைப் பிரிவு பயிற்சிப் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜென ரல் கிரிசாந்த டி சில்வா, இலங்கைக்கான சீனத் தூதுவர் யி ஜியான் லியாங் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

சீன ஆயுதக் காவல்படையின் 43 கொமாண்டோக்கள், லெப்.கேணல் கியூய் கியாங் தலைமையில் இலங்கை இராணு வக் கொமாண்டோக்களுடன் இணைந்து கடந்த ஜூன் 22 ஆம் திகதி இந்தக் கூட்டுப் பயிற்சிகளை ஆரம்பித்திருந்தனர்.

மூன்று கட்டங்களாக நடத்தப்பட்ட இந்தக் கூட்டுப் பயிற்சி நிறைவுக்கு வந்தது. நிறைவு நாள் நிகழ்வில், சீன - இலங்கை கொமாண்டோக்கள் பயிற்சி சாகசங்களை சிறப்பு விருந்தினர்கள் முன்பாக நிகழ்த்திக் காட்டினர்.

அத்துடன், பயிற்சி பெற்ற கொமாண்டோக்களுக்கு இலங்கை இராணுவத் தளபதியும், சீனத் தூதுவரும் சான்றிதழ்களை வழங் கினர்.

# மூன்று பிரதான கட்சிகளின் தேசியப்பட்டியல் விபரம்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில் 196 உறுப்பினர்கள் மக்கள் வாக் குகள் மூலமும் 29 உறுப்பினர் கள் தேசியப் பட்டியல் மூலமும் தெரிவு செய்யப்படுவர். அந்தந்த கட்சிகள் பெறும் வாக்குகளின் அடிப்படையில் தேசியப் பட்டிய லுக்கான ஆசனங்கள் வழங்கப் படும்.

இதன்படி பிரதான அரசியல் கட்சிகள் தேசியப் பட்டியலில் இணைத்துக் கொள்ள எதிரபார்த் துள்ள மக்கள் பிரதிநிதிகளின் பெயர்ப் பட்டியலை வெளியிட் டுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டி யல் விபரம்

ஏ.எச்.எம்.பௌசி, ஜீ.எல்.பீரிஸ், டிவ்.குணசேகர, திஸ்ஸ விதா ரண, மொஹமட் குஷேன் ரிஸ்வி ஷெரீப், சரத் அமுனுகம, திஸ்ஸ அத்தநாயக்க, டிலான் பெரேரா, ஜெயரத்னம் ஸ்ரீரங்கா, ரெஜி னோல்ட் குரே

ஜீவன் குமாரதுங்க, டிரான் அலஸ், மலித் ஜெயதிலக, ஷிரான் ... குணரத்ன, பிரபா கணேசன், பைசர் முஸ்தபா, ரஜீவ் விஜேசேகர, கபில குணசேகர, டி.ஏ.ரத்னபால, எச்.எம்.சரிதஹேரத், கருப்பையா கணேசமூர்த்தி, லேஸ்லி தேவே ந்திர, சோமவீர சந்திரசிறி, எம்.எச. எம்.உதுமா லொப்பை, ஜயந்த வீரசிங்க, பியசிறி விஜே நாய க்க, எம்.எச்.எம்.முஸாமில், கிவிந்து குமாரதுங்க

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் விபரம்

மலிக் சமரவிக்ரம, கரு ஜெய சூரிய, டி.எம்.சுவாமிநாதன், அனோமா கமகே, கே.வேலாயு தம், மொஹமட் தம்பி ஹசன் அலி, அஹமட் மொஹமட் ஜமில், அதுரலிய ரத்ன தேரர், ஜயம் பதி விக்ரமகே, திலக் ஜனக மாரப் பன, சந்திரஜித் ஆச்ஞா போத மாரசிங்க

நிஷாம் காரியப்பர், எம்.கே. டி.எஸ்.குணவர்தன, முஹமட் அசாத்சாலி, ஏர்வின் வீரக்கொடி, ராஜா உஸ்வட்டகெய்யாவ, விமல் ஜயசிறி, சுரநிமல ராஜபக்ஷ, வினி ஸ்டன் பதிராஜா, சிறினால்த மெரே, ஏ.சசிதரன், சாவுல் ஹமீட், ... அப்துல் கபீஸ், முஹமட் ஹபீர் முஹமட் சல்மன், ஓமல்பே சோபித்த தேரர், முஹமட் ரவூப் முஹமட் நாஜா, கே.யோகதாஸ் பஞ்சரத்னம் ராம், டீ.வி. குண ரத்ன

மக்கள் விடுதலை முன்னணி யின் தேசியப் பட்டியல் விபரம்

சரத் சந்திரசிறி மாயாதுன்ன, அருண கிஸ்மால் வர்ணசூரிய, உபுல் குமாரப்பெரும, ஏ.ஜே.ரு குணுஹேவா. சால்ஸ் தயானந்த, கே.எஸ்.சந்திரபோஸ். சுசிரிபால மானவடு, கபில பெரேரா, பியதாஸ ரணசிங்க, ஜனக குமார சிங்க

அல்ஹாச் மொஹமட் இப் ராகிம், எஸ்.சஜிவ சாமிகர, எஸ். அந்தனி ஜீவா, விநி ஹேட்டிகொட, நயோமி பிரியந்தி ரத்நாயக்க, அருன் ஹேமச்சந்திர, சரணபால ஜெயசூரிய, அனுருத்த ஜயசிங்க, அனுர ஸ்ரீநாத், ஜனசேன ஹேவகே, விமலசிறி புஞ்சிஹேவா, எச்.எப். ஷிப்லி மௌலானா, ரோஹித பண்டார, மஞ்சுல சமரசேகர, தம் மிக குமுது பொன்சேகா, மகிந்த தென்னக்கோன், காந்தி புஸ்ப லதா, எஸ்.ஜீ.கே.அந்தனி ஜய சிறி, ஞானக அதிகாரி

# இரு தேசியக் கட்சிகளின் வரலாற்றில் தீர்க்கமான தளமாக இம்முறை தேர்தல்

(யாழ்ப்பாணம்)

இம்முறை பொதுத்தேர்தலில் நாட்டின் இரு பிரதான தேசியக் கட்சிகளும் முன்னெப்போதும் இல்லாதவாறு ஒரு புறத்தில் மக்களின் ஜனநாயகத்துக்கு நேர் விரோதமாகவும் அவ்வாறே அதனை முறியடிப்பதற்கான நல்லாட்சிக்கான அணியாக மறுபுறத்திலும் தம்மை அடையாளப் படுத்திக் கொண்டுள்ளன.

இந்த நேரெதிர் நிலைப்பாடானது இம்முறை பொதுத் தேர்தலில் தோல்வியை தழுவினால் தமது இருப்பே கேள்விக்குறியாகிவிடும் என்கின்ற நிலையில் இந்தத் தேர்தல்களில் எப்படியாவது தம் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் இரு தரப்பினருமே முனைப்பாக உள்ளனர்.

இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு கடந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள், முறைகேடுகள், நீதித்துறையின் முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் தேர்தலில் தோல்வியை எதிர்கொண்டால் தமது முறைகேடுகள் நிரூபணமாகி விடும் என்றொரு ஆபத்தான நெருக்கடிக்குள் கடந்தகால ஆட்சியாளர்கள் சிக்கிக் கொண்டுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

இவ்வாறானதொரு சூழலில் தமக்கு மக்கள் ஆதரவு இருப்பதை இந்தத் தேர்தலில் நிரூபிப்பதன் மூலம் தமது கை சுத்தமானதென அவர்கள் நிறுவ முயறசிப்பதையும் இந்தத் தேர்தலில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மறுபுறத்தில் முன்னாள் ஆட்சியாளர்களை எதிர்த்து நிற்பவர்கள் தாம் இந்தத் தேர்தலில் தோல்வி கண்டால் தாம் வெளிப படுத்திய ஆட்சியின் மக்களால் பொருட்டாக எடுத்துக்கொள்ளப் படவில்லையென்பதாக அர்த்தப்பட்டுவிடும் என்கிற ஆபத்தை எதிர் கொண்டிருப்பதையும் இந்தத் தேர்தல் களத்தில் உணரக் கூடியதாகவுள்ளது.

பிரதான தேசியக் கட்சிகள் இந்த நேர்விரோத நிலைப்பாட்டுக்குள் சிக்கிக் கொண்டு தத் தமது தளங்களை வலுப்படுத்த முனையும் ஒரு சூழலில் இதில் எந்தத் தரப்பு ஜனநாயகத்துக்கு நேர் விரோதமானது என்பதையும் அவ்வாறே நேர்மையான ஆட்சியாளர்கள் யார் என்பதை மக்களே தீர்மானிக்கின்ற ஒரு தீர்க்கமான தேர்தல் களமாக இந்த பொதுத்தேர்தல் மக்கள் முன் வந்து நிற்கின்றது.

இந்த நிலையில் நாட்டின் முழு மக்களும் இன, மத, மொழி பேதம கடந்த நியாயத்துக்கும் அநியாயத்துக்கும் அவ்வாறே நேர்மைக்கும் நேர்மையீனத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை தெளிவாக வேறுபடுத்திக் கொண்டு தமது வாக்குகளை எவ்வாறு பிரயோகிக்கின்றார்கள் என்பதைப் பொறுத்தே இந்த மக்களின் எதிர்காலமும் அமையும் என்பதையும் விடத்தில் சுட்டுவது பொ மாக இருக்கும் என விமர்சகர் கள் தெரிவிக்கின்றனர். (அ)

# கால்நடைகளின் குறுக்கீட்டால் போக்குவரத்துக்கு இடையூறு

யாழ்.நகர மையப்பகுதிகள், தட்டாதெருச் சந்தி, நாச்சிமார் கோவிலடி போன்ற இன்னும் பல இடங்களில் கால்நடைகள் வீதிகளில் குறுக்கும் மறுக்குமாக நடந்தும், சில சேர்ந்து நடு வீதியில் நின்றும் வருகின்றன. இதனால் போக்குவரத்தில் ஈடுபடுவோர் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

கால்நடைகள், நாய்கள், ஆடுகளின் குறுக்கீட்டால் மோட்டார் சைக்கிள் முச்சக்கர வண்டி, துவிச்சக்கர வண்டிகளில் பயணிப்போர் விபதத்துக்களில் சிக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


இந்நிலையில் போக்குவரத்துக்கள் அதிகரித்தும், வேகமாகவும் இடம்பெறுகின்ற யாழ்.நகரப் பகுதிகளில் மேற்படி ஐந்தறிவு ஜீவராசிகள் நடமாட அனுமதிப்போர் யாரென மக்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

உயிரைப் பணயம் வைக்கும் இந்தப் பிரச்சினைக்கு அதிகாரமுள்ள சம்பந்தப்பட்டோர் உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டுமென்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (68)

# வட்டு. வாலிபர் சங்கத்தால் கல்விக்கான கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வலி. தென மேற்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட போரினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் கல்விக்கான வட்டு. இந்து வாலிபர் சங்கத்தின் உதவித்திட்டத்தில் ஏற்கனவே உள்ள 60 பிள்ளைகளுடன் நேற்றுமுன்தினம் வட்டு. இந்து வாலிபர் சங்கத்தினால் வலி. தென் மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சுமார் 20 பிள்ளைகளின் வங்கிக்கணக்கில் தலா 1000 ரூபா வைப்பிலிடப்பட்டு அவர்களுக்கு மாதாந்தம் 1000 ரூபா கல்விக்கான கொடுப்பனவு செயற்றிட்டத்தினை வட்டு. இந்து வாலிபர் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டது.




ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர் தினமுரசு 16.07.2015

நாளைய தினமுரசு வாரமலரில்...




- தெற்கு அரசியலில் திடீர் அதிர்வுகள்
- ஐ.தே. கட்சி ஆட்சியில் தீர்வு கிடைக்குமா தமிழருக்கு?
- பொய்த் தேசியவாதிகளின் போலிக் கோஷங்களை நிராகரிக்க வேண்டும்!

முன்னாள் பா. உ. சந்திரகுமார் சிறப்புப் பேட்டி

- சம்பூர் அகதிகளுக்கு வெற்றி



உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சுப்பர் ஸ்ராரின் துயரம்

சூடு - சுவை - சுவாரசியம் - இதுதான் தினமுரசு

## சூதாட்ட புகார் நிரூபணம்
# சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு இரண்டு ஆண்டுகள் தடை விதிப்பு




ஐ.பி.எல்.பிரிமியர் கிரிக்கெட் தொடரில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக சென்னை அணியின் குருநாத் மெய்யப்பன், ராஜஸ்தான் அணி உரிமையாளர் ராஜ் குந்த்ராவுக்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் பிரிமியர் தொடரில் சென்னை, ராஜஸ்தான் அணிகள் பங்கேற்க 2 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது. சூதாட்டம் குறித்து, விசாரித்து வரும் விசாரணை தலைவர் நீதிபதி லோத்தா தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

2013இல் நடந்த ஆறாவது பிரிமியர் தொடரில் சூதாட்டச்சர்ச்சை வெடித்தது. இதில் ஈடுபட்ட ராஜஸ்தான் அணியின் ஸ்ரீசாந்த், அன்கித் சவான், சண்டிலா சிக்கினர். ஸ்ரீசாந்த், அன்கித் சவானுக்கு போட்டியில் பங்கேற்க வாழ்நாள் தடை விதிக்கப்பட்டது. பிசிசிஐ, பதவியிலிருந்து சீனிவாசன் ஒதுங்க நேரிட்டது.

சூதாட்ட புகாரை விசாரிக்க, நீதிபதி முகுல் முத்கல் தலைமையிலான விசாரணை குழுவை உயர்நீதிமன்றம் நியமித்தது. இக்குழுவின் அறிக்கை கடந்த ஜனவரி மாதம் தாக்கல் செய்யப்பட்டது. இதில் சீனிவாசனின் மருமகன் குருநாத் மெய்யப்பன், ஐ.பி.எல்., செயல் அதிகாரி சுந்தர் ராமன், ராஜஸ் தான் அணியின் சக உரிமையாளர் ராஜ்குந்த்ரா ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டது உறுதியானது.


இரு அணிகள் மற்றும் இவர்களின் தண்டனை விவரம் குறித்து முடிவு செய்ய ஓய்வு பெற்ற நீதிபதி ஆர்.எம்.லோதா தலைமையில் 3 நீதிபதிகள் (அசோக் பான், ரவீந்திரன்) அடங்கிய குழு அமைக்கப்பட்டது. இக்குழு நேற்று தண்டனையை அறிவித்தது.

விசாரணைக் குழுவின் நீதிபதி லோதா கூறியதாவது,

சென்னை அணி நிர்வாகி குருநாத் மெய்யப்பன் சூதாட்டத்தில் ஈடுபட்டது உறுதியாகி உள்ளது. விளையாட்டு உணர்வு உள்ள யாரும் சூதாட்டத்தில் ஈடுபடமாட்டார்கள். இதனால் குருநாத் மெய்யப்பனுக்கு கிரிக்கெட் தொடர்பான எவ்வித விவகாரத்தில் பங்கேற்க வாழ்நாள் தடை விதிக்கப்படுகிறது. இதே போல, ராஜஸ்தான் அணி உரிமையாளர் ராஜ்குந்த்ராவுக்கும் , பி.சி.சி ஐ., சம்பந்தமான எவ்வித விவகாரத்திலும் பங்கேற்க வாழ்நாள் தடை விதிக்கப்படுகிறது. கிரிக்கெட் தொடர்பான விவகாரத்தில் 5 ஆண்டுகள் தடை விதிக்கப்படுகிறது.

பிரிமியர் தொடரில் பங்கேற்க சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு 2 ஆண்டுகள் தடை விதிக்கப்படுகிறது. இத்தொடரின் விவகாரத்தில் பங்கேற்க இந்திய சிமெண்ட் நிறுவனத்திற்கும் 2 ஆண்டு கால தடை விதிக்கப்படுகிறது. இந்த தண்டனை நேற்று முதல் அமுலுக்கு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# இரண்டாவது டெஸ்டில் பங்கேற்பாரா ஸ்டார்க்?



(கார்டிப்)

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் காயம் காரணமாக (வலது முழங்கால்) அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் மிட்சல் ஸ்டார்க் பங்கேற்பது சந்தேகமாக உள்ளது.

கார்டிப் நகரில் நடந்த ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்டில் இங்கிலாந்து அணி 169 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. இவ்விரு அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் நாளை லோர்ட்சில் தொடங்குகிறது. இப் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணியில் வேகப்பந்துவீச்சாளர் மிட்சல் ஸ்டார்க் பங்கேற்பது சந்தேகமாக உள்ளது. முதல் டெஸ்டின் போது இவரது வலது முழங்காலில் லேசான காயம் ஏற்பட்டது. இருப்பினும் இவர், வலி நிவாரண மருந்தின் உதவியுடன் போட்டியில் பங்கேற்றார். இவர், லோர்ட்ஸ் டெஸ்ட் போட்டிக்கு முன் முழு உடற்தகுதி பெற்றுவிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருவேளை 2ஆவது டெஸ்டில் ஸ்டார்க் விளையாடாத பட்சத்தில் முதல் போட்டியில் பங்கேற்காத மற்ற வேகப்பந்துவீச்சாளர்களான பீட்டர் சிடில் அல்லது பட்கம் மின்ஸ் தேர்வு செய்யப்படலாம். இதில் சிடிலுக்கு அதிக வாய்ப்பு உள்ளது.

இதுகுறித்து அவுஸ்ரேலிய அணியின் பிசியோதெரபிஸ்ட் அலெக்ஸ் கூறுகையில், முதல் டெஸ்டின் போது ஸ்டார்க்கிற்கு ஏற்பட்ட காயம் வேகப்பந்துவீச்சாளர்களுக்கு இயல்பாக வருவதுதான். இவர், 2ஆவது டெஸ்ட் போட்டி தொடங்குவதற்கு முன் முழு உடற்தகுதி அடைந்து விடுவார் என நம்புகிறேன். ஒருவேளை இவரால் பங்கேற்க முடியாத பட்சத்தில், அணியில் கூடுதலாக இரண்டு வேகப்பந்து வீச்சாளர்கள் உள்ளனர், என்றார்

# தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் பங்களாதேஷ் அணியில் முஸ்தாபிகூர்

தென்னாபிரிக்காவிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்களாதேஷ் வேகப்பந்து வீச்சாளர் முஸ்தாபிகுர் ரஹ்மான் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டித்தொடர் இன்றுடன் நிறைவடையவுள்ள நிலையில் இவ்விரு அணிகளுக்கும் இடையிலான இரு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாக வுள்ளது.

இந்நிலையில் டெஸ்ட் போட்டித் தொடருக்கான அணி விபரத்தினை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இந்த அணியில் கடந்த யூன் மாதம் நடைபெற்ற இந்திய தொடரில் பங்கேற்ற அபுல் ஹசன் சுவாகட்டா ஹோம் ஆகியோர் நீக்கப்பட்டு முஸ்தாபிசுர் ரஹ்மான் மற்றும் மஹ்மதுல்லா ஆகியோர் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.


கடந்த யூன் மாதம் இந்தியாவிற்கு எதிராக நடைபெற்ற ஒரு நாள் போட்டித்தொடரில் சிறப்பாகச் செயற்பட்ட முஸ்தாபிசுர் ரஹ்மான் 16 விக்கெட்டுகளை வீழ்த்தி அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



இதன்படி தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பங்களாதேஷ் அணி விபரம் வருமாறு

. முஸ்பிகுர் ரஹிம் (கப்டன் தமீம் இக்பால் (துணை கப்டன்), இம்ருல் கெய்ஸ்,. லிட்டான் தாஸ், மொமினுல் ஹக்யூ,. ஷாகிப் அல் ஹசன்,. மெக் முதுல்லா,. சவுமியா சர்கார்,. நசீர் ஹொசன், தைஜுல் இஸ்லாம்,. ஜுபைன் ஹொசைன்,. ருபெல் ஹொ சன்,. மொகமது சாஹித்,. முஸ்தாபிஜுர் ரகுமான்.

# ஏடிபி சலஞ்சர் கிண்ணம் சோம்தேவ் வசம்



(அமெரிக்கா)

அமெரிக்காவின் வின்னெட்கா நகரில் நடைபெற்ற ஏடிபி சலஞ்சர் போட்டியில் இந்தியாவின் சோம்தேவ் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். இது சோம்தேவ் வென்ற 5ஆவது ஏடிபி சலஞ்சர் பட்டமாகும்.

சோம்தேவ் தனது இறுதிப் போட்டியில் 7-5, 4-6, 7-6 (5) என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் டானியல் நுயனை தோற்கடித்தார். மழையால் பாதிக்கப்பட்ட இந்த ஆட்டம் 3 மணி நேரம், 31 நிமிடங்கள் நடைபெற்றது. இதன் மூலம் இறுதிப்போட்டியில் அதிகநேரம் விளையாடிய இந்தியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

வெற்றி குறித்துப் பேசிய சோம்தேவ், "இது மிகப்பெரிய வெற்றியாகும். இந்த ஆண்டில் தொடர்ந்து கடுமையாக உழைத்து போதிலும், வெற்றி பெற முடியாமல் கடுமையாகப் போராடினேன். இப்போது வெற்றி பெற்றிருப்பதன் மூலம் நெருக்கடியிலிருந்து மீண்டுள்ளேன்.

டானியல் என்னைக் கடுமையாகப் போராட வைத்தார். அவர் நல்ல வீரர் மட்டுமல்ல, நல்ல போட்டியாளரும்கூட" என்றார்.

# உலககிண்ண கால்பந்து தயாராகும் புதிய அரங்கு

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு உலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட ரஷ்யா ஜெகாடிரின்பேர்க்கின் புதிய அரங்கின் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த கட்டுமானப்பணிகள் ஊடகவியலாளர்களுக்கு காண்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கால்பந்து போட்டிகளை ரஷ்யாவில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான முன்னேற்பாடுகளில் ரஷ்யா ஈடுபட்டு வருகின்றது.

அந்த வகையில் போட்டிகளை நடாத்துவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள 11 நகரங்களினதும் அரங்க கட்டுமானப்பணிகள் தொடர்பில் ஊடகங்களுக்கு ரஷ்யா வெளியிட்டு வருகின்றது.


அந்த வகையில் மொஸ்கோவில் இருந்து 177 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஜெகாடிரின் பேர்க்கில் தெரிவு செய்யப்பட் அரங்கு தொடர்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

சோவியத் காலத்தில் கட்டப்பட்ட இந்த அரங்கு 2018 ஆம் ஆண்டு உலகக்கிண்ண கால்பந்து போட்டிகளுக்காக மீளவும் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டுமான இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டு புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன.



எதிர்வரும் ஒகஸ்ட் மாத இறுதிக்குள் அரங்கு முற்றாக இடிக்கப்பட்டு அடித்தளம் அமைத்து இந்த ஆண்டு இறுதிக்குள் புதிய அரங்கு உருவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் 2017 ஆம் ஆண்டில் முற்றாக நிறைவு பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை ஏனைய அரங்குகளிலும் கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச விசேட ஒலிம்பிக்போட்டியில் சிவபூமி மாணவர்களும் பங்கேற்பு




(திருநெல்வேலி)

அமெரிக்காவில் நடைபெறும் சர்வதேச' விசேட ஒலிம்பிக் போட்டியில் சிவபூமி பாடசாலையைச்சேர்ந்த இரண்டு மாணவர்கள் பங்குபற்றத் தகுதி பெற்றுள்ளனர்.

எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் அடுத்தமாதம் 02ஆம் திகதி வரை அமெரிக்கா லோசேன்சஸ் நகரில் நடைபெறவுள்ள விசேட ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றும் தகுதியை இலங்கையைச் சேர்ந்த 5 விஷேட தேவைக்குரிய மாணவர்கள் பெற்றுள்ளார்கள். அவர்களில் மூவர் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் இருவர் வடபுலத்தைச் சேர்ந்த கோண்டாவில் சிவபூமி பாடசாலை மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் தேசிய மட்டத்தில் சிவபூமி பாடசாலை மாணவர்கள் செல்வன் அரசகுலசூரியர் மயூரன், செல்வன் ஜெயச்சந்திரன் மனோஜன் ஆகிய இருவரும் தெரிவாகியுள்ளனர்.

கடந்த ஒரு வருடகாலமாக இப் போட்டியில் வெற்றி பெறுவதற்காக யாழ்.பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்திலும், கொழும்பு, காலி விளையாட்டு மைதானங்களிலும் சர்வதேச விளையாட்டு விதிமுறைக்கமைய கடும் பயிற்சி பெற்றுள்ளனர். சர்வதேச விசேட ஒலிம்பிக் போட்டிக்கான இலங்கை முகாமையாளர் வைத்திய கலாநிதி. நிமால் காரிய வம்ச தலைமையில் பல்வேறு விஷேட தேவையுடையோருக்கான போட்டிகள் தொடர்ச்சியாக கொழும்பு, காலி, மாத்தறை, கிக்கடுவை போன்ற இடங்களில் நடைபெற்றன. அனைத்துப் போட்டிகளிலும் சிவபூமி பாட சாலையைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் இறுதித் தேர்வு வரை பங்கு பற்றினார்கள்.

இறுதி நேரத்தில் சில புள்ளிகளால் முத்துத்தம்பி சதீஸ்குமார் அமெரிக்கா செல்லும் வாய்ப்பை இழந்தார். எனினும் மற்றைய இருவரும் மேற்படி போட்டியில்




பங்குபற்றும் வாய்ப்பைப் பெற்றனர். இலங்கை வரலாற்றில் ஒரேயொரு தமிழ்ப்பாடசாலை சர்வதேச ரீதியில் நடைபெறும் விசேட ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்க மண்ணில் கால் பதிக்கும்பேறு சிவபூமி பாடசாலைக்கு கிடைக்கிறது.

இவர்களைப் பாராட்டி வழியனுப்பும் வைபவம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் சிவபூமி பாடசாலையில்நடைபெறவுள்ளது.

(137)

# கம்பர்மலை யங்கம்பன்ஸை வீழ்த்தியது நெடியகாடு



புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடாத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் வரிசையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் கம்பர்மலை யங்கம்பன்ஸை வீழ்த்தியது நெடியகாடு.

ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியின முடிவில் 3:3 என்ற கோல் கணக்கில இரு அணிகளும் கோல்களைப பெற்று போட்டி சமநிலையில முடிவடைய, போட்டியின் முடிவைத் தீர்மானிப்பதற்கு நடுவர் தண்ட உதையினை வழங்கியிருந்தார்.

தண்ட உதையில் 5:4 என்ற கோல் கணக்கில் நெடியகாடு வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

யங்கம்பன்ஸ் அணி, இந்த வருடம் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் நடாத்தியிருந்த Jaffna challengers cup-2015 சுற்றுத்தொடரில் 2 ஆம் இடத்தை பெற்ற பலம் வாய்ந்த ஒரு அணி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வடக்கு மாகாண விளையாட்டு விழா சம்பியனாகியது யாழ்.கல்வி வலயம்

## 20 இற்கும் மேல் புதிய சாதனைகள்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்த வடக்கு மாகாண எட்டாவது விளையாட்டு விழாவில் 1693 புள்ளிகளைப் பெற்ற யாழ். கல்வி வலயம் சம்பியனாகி அசத்தியது.

அத்துடன் வலிகாமம் கல்வி வலயம் 970 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும் வடமராட்சி கல்வி வலயம் 740 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் பிடித்துக் கொண்டன.

வடக்கு மாகாண விளையாட்டு விழாவின் கடைசி நிகழ்ச்சியான தடகளப்போட்டிகள் நேற்று முன்தினம் நிறைவு பெற்றன. வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த 12 கல்வி வலயங்களின் 351 பாடசாலைகளைச் சேர்ந்த 2500 இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் தடகளப் போட்டிகளில் பங்குபற்றியிருந்தனர்.இப் போட்டிகளில் மொத்தமாக 20 இற்கும் மேற்பட்ட புதிய சாதனைகள் நிலை நாட்டப்பட்டிருந்தன.

தடகளப் போட்டிகளில் யாழ் கல்வி வலயம் 727 புள்ளிகளைப பெற்று சம்பியனானது.

மன்னார் கல்வி வலயம் 556 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும் வலிகாமம் கல்வி வலயம் 500 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

தடகள போட்டிகளில் அதி சிறந்த ஆண் மெய்வல்லுநராக மன்னார் அரிப்பு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த ஆர். எஸ். ரினோஷன் (858 புள்ளிகள்) தெரிவானார். அதி சிறந்த பெண் மெய்வல்லு நராக முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வி. ஜெனிட்டா (776 புள்ளிகள்) தெரிவானார்.

# கிண்ணம் வென்றது அளவெட்டி ஞானவைரவர்



சங்கானை NCC விளையாட்டுக்கழகம் அண்மையில் நடாத்திய துடுப்பாடடச்சுற்றுப்போட்டியில அளவெட்டி ஞானவைரவர் ஏ,பி என இரு அணிகளாக களமிறங்கின. ஏ அணி, வட்டு மத்தி,தொட்டிலடி EDS, வழக்கம்பரை அம்மன் அணிகளை சந்தித்து வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது. பி அணி பத்துப்பனை, கல்வளை ROCK, சங்கானை உதயதாரகை ஆகிய அணிகளை சந்தித்து மிகத் திறமையாக விளையாடி இறுதிப்போட்டியில் ஏ அணியினை எதிர் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய பி அணி 6 ஓவர்களில் 85 ஓட்டங்களை பெற்றது. ஏ அணி சபேசன், சிறிசாந், கணதீபனின் அதிரடித்துடுப்பாட்டத்தின் மூலம் 5.1 ஓவர்களில் 91 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

# இங்கிலாந்து அணியில் மாற்றம் இல்லை

இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடரின் இரண்டாவது போட்டியில், இங்கிலாந்து அணியில் மாற்றம் இடம்பெறவில்லை என இங்கிலாந்து கிரிக்கெட் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நடைபெற்று முடிந்த முதல் டெஸ்ட் போட்டி கடந்த 8 ஆம் திகதி கார்டிப் மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் இங்கிலாந்து அணி 169 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்ரேலியாவை வீழ்த்தி தொடரில் 1-0 என முன்னிலையில் உள்ளது.

முதல் போட்டியில் அணி வீரர்கள் சிறப்பாகச்செயற்பட்டதால் அணியில் மாற்றம் செய்ய விரும்பவில்லை. இதனால் முதல் போட்டியில் இடம்பெற்ற அதே 13 பேர் இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கும் இடம்பெறுவார்கள் என இங்கிலாந்து கிரிக்கெட் நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஆஷஸ் தொடரின் இரண்டாவது போட்டி, நாளை லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்து அணியின் ஆலோசகராக மஹேலவ?

இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் மஹேல ஜெயவர்த்தனவை இங்கிலாந்து அணியின் ஆலோசகராக நியமிப்பது குறித்து இங்கிலாந்து கிரிக்கெட் சபை ஆலோசனை நடாத்தி வருவதாகத் தெரிய வருகின்றது.

நடைபெற்று முடிந்த உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் பெரிதாக சோபிக்காத இங்கிலாந்து தமது அணியை முன்னிலைப்படுத்துவதற்காகவும் கிரிக்கெட்டை மேலும் வலுப்படுத்துவதற்காகவும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

அந்தவகையில் அணியின் இயக்குநராக முன்னாள் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஸ்ட்ராஸ் நியமிக்கப்பட்டார். அதேவேளை அவுஸ்ரேலியாவின் டிரெவோர பெய்லிஸ் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் தற்போது அனைத்து வகை கிரிக்கெட் போட்டியிலும் சிறந்து விளங்கிய இலங்கை அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் ஜெயவர்த்தனவை இங்கிலாந்து அணியின் ஆலோசகராக நியமிக்க பேச்சு வார்த்தை நடாத்தப்படுகின்றது.



எனினும் இது தொடர்பாக உறுதியான தகவல்களை இங்கிலாந்து அணியின் இயக்குநர் ஸ்ட்ராஸ் வெளியிடவில்லை.

எதிர்வரும் 18 மாதங்களில் இங்கிலாந்து, ஆசிய கண்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில் ஆசிய நாடுகளின் மைதானங்கள் தொடர்பில் நன்கு அறிந்த ஜெயவர்த்தனவின் ஆலோசனை கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை எதிர்பார்ப்பதாகவும் இதன் காரணமாக ஜெயவர்த்தனவை ஆலோசகராக நியமிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சின்னதாய், த்ரில்லிங்காய், ஒரு புன்னகைப் புரட்சி

- வ.ஸ்ரீநிவாசன் - 3

**பி**ட்ஸா படத்தின் கதை சொல்லல், நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம் படத்தின் நடிப்பு, காட்சி அமைப்பு, வசனம் போன்றவற்றில் இருந்த இயல்புத் தன்மை அவற்றின் தர்க்கமற்ற தன்மையை மறக்கடிக்கச் செய்யும். அதுவும் கல்யாண வரவேற்பில் தன் காதலியையே (சமீபத்திய சம்பவங்களின் நினைவை இழந்து விட்ட) விஜய் சேதுபதி திரும்பிப் பார்த்து விட்டு "ப்பா! யாருடா இது? பேய் மாதிரி" என்கிற காட்சிகள் அட்டகாசம். "சூது கவ்வும்" படத்தின் திருப்பங்கள், மிக அமைதியான முறையில் சொல்லப்பட்ட வெடிச் சிரிப்புக் காட்சிகள். "வீரம் அறவே கூடாது" என்கிற 'k'e'dnapping' வகுப்பின் அடிப்படை விதிகளில் கடைசி விதி போன்றவை. எதிர்பாராத




விதமாக, ஒரே மாதிரி அமைக்கப்படாத கேலிக் காட்சிகள் இப்படத்தை நுணுக்கமாக முந்தைய படங்களிலிருந்து வேறுபடுத்துகின்றன.

"இ.ஆ.பா.கு." இந்தப் படத்தின் உத்தி பெரிய இயக்குநர்கள் முன்பு எடுத்துத் தோற்ற ஒன்று. "ஆயுத எழுத்து" படத்தில் மூன்று கதையோட்டங்கள் ஒரு புள்ளியில் சந்திக்கும். இதிலும். ஆனால் சரியாக, துல்லியமாக முன்னாலும், பின்னாலும் நிகழ்பவை அமைந்து இப்படத்தை எங்கோ எடுத்துச் சென்று விட்டன. விஜய் சேதுபதி தவிர, ஒரே காட்சியில் வரும் பசுபதி, சூரி அவர் அண்ணியாக வருபவர், கொலையாளிகள் இருவர் என்று படம் நெடுக நடிப்புக் கொடி உயரே பறக்கும்.

ஜிகிர்தண்டா (2014 கார்த்திக் சுப்புராஜ்) ஒரு புது மாதிரியான படம். முற்றிலும் புதிதான அணுகு முறை, வழங்கு முறை. படம் பார்த்துக் கொண்டே வருகையில் ஒரு சமயம் நாமும் உள்ளே மழையில் நனைந்து கொண்டு இருப்போம். அப்புறம்தான் கதையில் ட்விஸ்ட். அற்புதமான கற்பனை. காட்சியமைப்புகள். புத்திசாலித்தனம். ஆனாலும் இதில் சில பிரச்சினைகளும் இருந்தன. மிகவும் வன்முறையாகக் கொலைகளைச் செய்யும் ஒருவன் கடைசியில் காமெடிப் பீசாவதால் படம் ஒரு அபாயகரமான நுண்ணுணர்வுக் குறைபாட்டுக்கு சமூகத்தை இட்டுச் செல்கிறது. குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதும், நிரபராதிகள் தப்புவதும் எப்போதும் நடக்கிற விஷயம் இல்லை என்பது வாழ்க்கையில் உள்ள நிதர்சனம். ஆனால் ஒரு வன்முறையாளனை காமெடி பீசாக்கி சாதாரணமாக உலவ விடுவது - அதுவும் அவ்வளவு விலா வாரியாக அவன் வன்முறைகளைக் காட்டியபின் - ஒரு பொறுப்பற்றதனம். ரோமன் பொலான்ஸ்கி படங்களிலும் எப்போதும் சாத்தானே வெல்லும். ஆனால் அந்த வெற்றியின் சோகம் உங்கள் மேல் கனமாகக் கவிந்து கொள்ளும்.

முன்பெல்லாம் நல்ல படங்கள், இயக்குநர்கள் கூடவெல்லாம் பெரும்பாலும் இளையராஜா இருப்பார்.

எம்.எஸ்.வி., கே.வி.எம்., இளையராஜா, ரஹ்மான், சிவாஜி, எம்ஜியார், கமல், ரஜினி, ரி.எம்.எஸ், சுசீலா, எஸ்பிபி, ஜானகி காலம் போய் இப்போது பல இசையமைப்பாளர்கள், நடிகர்கள், பின்னணிப் பாடகர்கள். ஒரு விதமாக அதீதமான பெரிய ஆளுமைகள் காலம் முடிந்த மாதிரி இருக்கிறது. தனி மனித ஆதிக்கம் குறைந்து, படங்கள் முன்னிறுத்தப்படுகின்றன.

இவற்றுக்கிடையில் "இமான்", "சந்தோஷ் நாராயணன்" இசையமைத்த பாடல்கள் பெரிய ரசிகர் வட்டத்தை உருவாக்கியுள்ளன. ஜனரஞ்சகமான ஹிட்களாக உள்ளன. அதே போல் எத்தனை நல்ல நடிகர்கள், சின்னச் சின்ன பாத்திரங்களில் வந்து என்னமாய் நடிக்கிறார்கள். கதை, வசனம், இயக்கம், தொழில் நுட்பம் போன்ற அனைத்து துறைகளிலும் புது இரத்தம் பாய்ந்துகொண்டிருக்கிறது. புதுக் காற்று வீசிக் கொண்டிருக்கிறது.

மேலே சொன்னவற்றில் பல படங்களில் "விஜய் சேதுபதி" சம்பந்தப்பட்டுள்ளார். நடித்துள்ளார். மேலும் பல நல்ல நடிகர்கள் இப்படங்கள் பலதிலும் வருகிறார்கள். விஜய் சேதுபதி இயக்குநராக இல்லை. எனினும் அவரை தமிழனின் அடிப்படை இயல்பான உயர்வு நவிற்சியின் படி, பாடாத பிரபுதேவாவை மைக்கேல் ஜாக்ஸன் என்பது போல், தமிழ் நாட்டின் "மெல் ப்ரூக்ஸ்" என்று சொல்லத் தோன்றுகிறது.

தமிழ் சினிமா சத்தமில்லாமல், குடும்பங்களில் சிறுவர்கள் - சிறுமியர்கள் பெரியவர்களாகி வீட்டு, வெளிப் பொறுப்புகளை அனாயாசமாக பூரண நம்பிக்கையோடு, புன்னகையோடு ஏற்றுச் செய்வது போல், திடீரென்று மாறி விட்டது. தொழில் நுட்ப வளர்ச்சி சினிமாத் தொழிலை ஓரளவு பணச் சார்பின் அதீதப் பிடியிலிருந்து விடுதலை செய்திருக்கிறது.

சாதி, துவேஷம், ஆபாசம், வன்முறை, சிக்கலான நம்பமுடியாத கதை, மேதாவித்தனம் போன்ற பிணிகள் இல்லாத ஜௌவனமும், புத்துணர்வும், தைரியமும் மிக்க இளைஞர்கள் சிலர் தலை தூக்கியிருக்கிறார்கள். இவர்களில் பலரும் குறும்படங்களில் சம்பந்தப்பட்டு புகழ் பெற்றவர்கள். முக்கியமாக பெரும்பாலானவர்கள் சினிமா குடும்பப் பின்னணி இல்லாதவர்கள். இவர்களது வரவு நல்வரவாகுக!

சிறிய பட்ஜட் படங்கள் நிறைய வரத் தொடங்கியிருக்கின்றன. அந்த முதலீட்டிற்கு ஏற்றதுபோன்ற சமரசங்களுடன். தமிழ் சினிமா மீது இன்றுவரை எனக்கு இருக்கும் பயம், அவற்றின் ரிஷிமூலங்கள் பெரும்பாலும் நமக்குத் தெரியப்படுத்தப்படுவதே இல்லை. நம்மை அறியாமல் நம் மீது ஐரோப்பிய, அமெரிக்க, ஜப்பானிய, கொரிய (இன்னும் எத்தனை?) சினிமா அலைகளின் சாரல் தெறிக்கப்படுவதுதான். நாம் இதுவரை தமிழின் "கல்ட்" படங்கள் என்று சொல்லிக்கொள்ளும் சில சினிமாக்களே இப்படி வடிவமோ களமோ களவாடப்பட்டு எடுக்கப்பட்டவை என்று தெரியவரும்போது வருத்தமாக இருக்கிறது.

ஆனாலும் பெரிய அதிபர்களிடமும், பிரசாரகர்களிடமும், நட்சத்திர அதிமனிதர்களிடமும் இருந்த தமிழ் சினிமா உலகில் விடுதலை தென்படுகிறது. சரியாகச் சொன்னால் இப்போதுதான் ஜனநாயகம் மலர்ந்திருக்கிறது.

இது ஆபாசக் குட்டையிலோ, வன்முறை சாக்கடையிலோ விழலாம். விழுந்து அல்லது விழாது மறுபடி மறுபடி செக்கு மாடு போல் இங்கேயே சுற்றி நின்று போகலாம். ஒருவேளை... ஒருவேளை.... நாம் வெட்கப்படாமல் "இதுதாங்க எங்க சினிமா" என்று நம்பிக்கையோடு, குற்றவுணர்ச்சியோ, மிகையுணர்வோ இன்றி உலகத்துக்குக் காட்டக் கூடிய "நவ தமிழ் சினிமா"வின் உதயத்துக்கும் வழி கோலலாம்.

## பெர்ஃப்யூம் - எப்படி உபயோகப்படுத்தலாம்?


**தி**னமும் உபயோகிக்கும் பெர்ஃப்யூமை எப்படித் தேர்ந்தெடுக்க வேண்டும்? எப்படிப் பயன்படுத்த வேண்டும்? இதோ சில குறிப்புகள்:

✠ வெளி அட்டைப்பெட்டியைப் பார்த்து பெர்ஃப்யூமைத் தேர்வு செய்யக் கூடாது. முதலில் தரமான நிறுவனத் தயாரிப்பா என்பதைக் கவனிக்க வேண்டும். அடுத்து எக்ஸ்பயரி திகதியைக் கட்டாயம் கவனிக்க வேண்டும்.

✠ பெர்ஃப்யூமை ஸ்மெல் செய்து பார்க்க ஒவ்வொன்றாக உடலில் அடித்துப் பார்க்காமல், அதன் மூடியிலேயே சிறிது அடித்து நுகர்ந்து பார்க்கலாம்.

✠ பெர்ஃப்யூம்கள் ஜாஸ்மின், ரோஸ், ஒறேஞ்ச், சொக்லேட் என ஏராளமான நறுமணங்களில் கிடைக்கின்றன. அவற்றில் அவரவரது தோலின் தன்மைக்கு ஏற்ப தேர்வு செய்ய வேண்டும். இல்லையென்றால் சிலருக்கு அலர்ஜி ஏற்பட வாய்ப்பு உண்டு.

✠ பொடி ஸ்ப்ரேயை நேரடியாக உடலில் அடிப்பது போன்று பெர்ஃப்யூமை நேரடியாக உடலில் அடிக்கக் கூடாது. ஏனென்றால் பெர்ஃப்யூமில் கலந்திருக்கும் இரசாயனங்கள் உடலில் பட்டால் சருமம் பாதிக்கப்படும். அதேபோல் துணிகளின் மீது அடித்தாலும் அதில் உள்ள அமிலப் பொருள்கள் துணியின் நிறத்தை அழித்துவிடும். அதனால் சிறு பஞ்சுகளில் பெர்ஃப்யூமைத் தெளித்து அதனைத் துணியின் மேல் தடவிக் கொள்ளலாம். தரமான பெர்ஃப்யூம்களாக இருந்தால் இந்தப் பாதிப்புகள் இருக்காது.



✠ பெர்ஃப்யூமை கழுத்து, தலைமுடி, செயின் போன்றவற்றில் படாதவாறு அடிக்க வேண்டும்.

## ஹொலிவுட்டின் அடுத்த விண்வெளிப் படம்!



**வி**ண்வெளி மற்றும் அறிவியல் ஆராய்ச்சி தொடர்பான படங்களின் எண்ணிக்கை, சமீபகாலமாக ஹொலிவுட்டில் குறைந்துள்ளது. அக்குறையைப் போக்க, The Martian என்ற படம் தயாராகி வருகிறது. செவ்வாய்க் கிரகத்துக்குச் செல்லும் விண்வெளி வீரர்களின் விண்கலம், அங்கு வீசிய சூறாவளியை தாக்குப்பிடிக்க முடியாமல் பூமிக்குத் திரும்புகிறது. ஆனால், கதாநாயகன் மட்டும் திரும்ப முடியாமல், அங்கேயே சிக்கி விடுகிறார்; இது தான் படத்தின் கதை!

ரிட்லி ஸ்கொட் இயக்கத்தில், விண்வெளிப்படங்களுக்கே உரிய பிரமாண்டமான செட்டிங்ஸ், கிராபிக்ஸ் அம்சங்களுடன், மிகப் பெரிய பொருட்செலவில் படம் தயாராகி வருகிறது. வரும் ஒக்ரோபர் 2ஆம் திகதி வெளியாகவுள்ள இந்தப் படத்துக்கு ஹொலிவுட்டிலும் வெளியேயும் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

# “தமிழ்த்தேசியத்தை வைத்துப் பிழைப்பவர்களை நிராகரியுங்கள்!”

**- ஜனநாயகப் போராளிகள் கட்சிப் பிரமுகர் வேந்தன்.**

“எங்களுடைய தலைவரால் உருவாக்கப்பட்டு எங்களால் வளர்க்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்புலாக நின்றது நாங்களே. எங்களால் உருவாக்கப்பட்ட அந்தக் கட்சியை மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கும் அதனைப் பலம் பொருந்திய ஒரு கட்சியாக அமைப்பதற்குமே நாங்கள் திட்டமிட்டிருந்தோம். அத்துடன் ஜனநாயகப் பாதைக்கு வந்த நாம் மக்களுக்கு சேவையாற்றுவதற்காக கூட்டமைப்புடன் சேர்ந்து எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கும் நினைத்திருந்தோம். இந்த நோக்குடன் நாம் கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தன் ஐயாவையும் ஏனைய கூட்டமைப்பின் உறுப்பினர்களையும் சந்தித்து “எங்களையும் கூட்டமைப்புக்குள் உள்வாங்குங்கள். நாங்கள் உங்களுக்கு பக்க பலமாக இருப்போம், எங்களில் ஓரிருவருக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கும் சந்தர்ப்பம் தாருங்கள் என மிகவும் பணிவாக அவர்களிடம் கேட்டோம்.



ஆனால் அதற்கு சம்பந்தன் சொன்ன பதில் என்னவெனின் “உங்களை நாங்கள் இணைத்துக் கொண்டால் வெளிநாடுகள் எல்லாம் எங்களை பயங்கரவாதிகள் என்ற நோக்கில் பார்க்கும். நீங்கள் அரசாங்கத்தின் புலனாய்வாளர்கள்” என்று மிகவும் கேவலப்படுத்தி கதைத்தார்.

நீங்கள் இராணுவப் புலனாய்வாளர்களின் பின்னால் நின்று கொண்டு வருகின்றீர்கள் என மிகக் கேவலமாகத் தெரிவித்தார். அப்போது நான் “ஐயா, நாங்கள் புலனாய்வாளர்களாக இருந்திருந்தால் உங்களுக்கு முன்னால் வந்து எங்களையும் சேர்த்துக் கொள்ளங்கள் என கேட்டிருக்கமாட்டோம். தனித்து நின்று சுயேட்சையாகப் போட்டியிட்டு உங்களின் வாக்குகளைப் பிரிக்கும் நடவடிக்கையை எடுத்திருப்போம். இது எங்களுடைய கட்சி, நாங்கள் உருவாக்கிய கட்சி, நாங்கள் 2004ஆம் ஆண்டு சைக்கிளில் வீடுவீடாக பிரசாரம் செய்து மக்களிடம் வாக்கு கேட்ட கட்சி. யாழ்ப்பாணத்தில் இருந்து முகமாலை வரை சைக்கிள்களில் சென்று பிரசாரம் செய்து இந்தக் கட்சியை வளர்த்துள்ளோம். வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் வரை மிகுந்த சிரமத்தில் பரப்புரை செய்தோம். ஆகவே இந்தக் கட்சியை நாம் உடைக்க நினைக்கவில்லை.

எங்கள் போராளிகள் ஜனநாயகப் பாதைக்கு வருவதற்கு நீங்கள் சந்தர்ப்பம் தரவேண்டும். எங்களின் பின்னால் புலனாய்வாளர்கள் இல்லை. எங்களின் பின்னால் மக்களே இருக்கின்றார்கள். மக்களின் சக்தியை நம்பியே நாம் ஜனநாயக வழிக்கு வந்துள்ளோம். எங்களை மக்கள் நிச்சயம் வரவேற்பார்கள்.

நான் பல வருடங்கள் போராளியாக வாழ்ந்துள்ளேன். எனது தங்கையைப் போராட்டத்தில் இழந்துள்ளேன். எனக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினராகிய உங்களிம் வந்து கதைப்பதற்கு உரிமையிருக்கின்றது என கூறினேன். கூட்டமைப்பில் இருக்கும் யாராவது ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இந்த மக்களுக்காகவும் மண்ணிற்காகவும் தங்கள் பிள்ளைகளை அர்ப்பணிப்பார்களா? விடுதலைப் புலிகளையும் எமது மக்களையும் வைத்து கேவலமான பிழைப்பு நடாத்துகின்றார்கள். சொகுசு வாகனங்களில் திரிகின்றார்கள். தேர்தல் வரும் வேளைகளில் புலிகளை இழுத்து தமிழ்த்தேசியம் கதைக்கின்றார்கள். மாவீரன் பிரபாகரன்.

மாவீரர்கள் போற்றப்படக் கூடியவர்கள். தேர்தல் முடிந்தபின் புலிகளின் கொள்கைகள் வேறு, எமது கொள்கைகள் வேறு என கூறுகின்றார்கள்.

ஆகவே நீங்கள் இதைப் புரிந்து கொள்ளுங்கள். மக்களே!! கூட்டமைப்பினர் சரியான முறையில் மக்களுக்கான சேவையை ஆற்றியிருந்தால் நாங்கள் தேர்தலில் குதிக்க வேண்டிய அவசியம் வந்திருக்காது. நாங்கள் கதைத்துக் கொண்டிருப்பவர்கள் அல்ல. நாங்கள் செய்து காட்டுபவர்கள். எனவே இதனை உணர்ந்து நீங்கள் எமக்குப் பலத்தைத் தர வேண்டும்.

---

# இன்று ஒருவரையொருவர் எதிர்க்கும் ‘நல்லாட்சி’யின் முதல்வர்கள்!

**- என்.கே.அஷோக்பரன் கட்டுரையிலிருந்து.**

சட்டத்தின் ஆட்சி என்பது நல்லாட்சியின் அடிப்படைகளில் ஒன்றாகும். ஆனால், தண்டிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டவர்கள் பலரும் அதிகாரபலம் கொண்டு அடக்கப்படாது, சட்டத்தின் கரங்களில் விடப்பட்டதை பலருக்கும் ஏற்றுக் கொள்ளமுடியாமற் போனது. இது நல்லாட்சியை விரும்பியவர்கள் தொடர்பான முரண்நகையே! இதை சுருக்கமாக “றொபின் ஹூட்” மனநிலை எனலாம். அதாவது நல்லதுக்காகத் திருடினால் தவறில்லை என்ற எடுகோள்.

ஆனால், சட்டரீதியாகவும் சரி, விழுமியங்களினடிப்படையிலும் சரி இது ஏற்புடையதொன்றல்ல. சட்டம் “நான் நல்லது விளைவதற்காகக் குற்றம் புரிந்தேன்” என்பதை ஒரு நியாயமாக ஏற்பதில்லை. அது போலவே மகாத்மா காந்தி, “முடிவுகள், அது அடையப்பெற்ற வழிமுறையை நியாயப்படுத்தாது“ என்று சொன்னார். ஆக நல்லாட்சி என்பது குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்பது மட்டுமல்ல, அவர்கள் உரிய நடைமுறையின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும் என்பதையும் உள்ளடக்கியதாகும்.

இதனை விவரிப்பதற்குக் காரணம் உண்டு. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாப்பை இங்கு கருத்திற்கொள்வது அவசியம். அதன் படி நியமனங்கள் தொடர்பான முடிவை அதன் தலைவரோ (ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன), பொதுச் செயலாளரோ (சுசில் பிரேமஜயந்த) எடுக்க முடியாது. மாறாக கூட்டமைப்பின் 72 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழுவே அதனைத் தீர்மானிக்கும் வலிமைகொண்டது.

யாப்பின் படி, செயற்குழுவில் 37 முதல் 49 அளவிலான உறுப்பினர்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் ஏனைய வர்கள் ஏனைய கூட்டணிக் கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பார்கள். ஆகக் குறைந்தபட்சம் 37 எனக் கொண்டால் கூட, ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தலைமையேற்றுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 51 சதவீத பெரும்பான்மை பலமுள்ளது. ஆனால், இது சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சகல செயற்குழு உறுப்பினர்களும் ஒருமித்த கருத்துடையவர்களாக இருந்தால்தான் சாத்தியம்.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பலரும், கூட்டணிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பலரும் மகிந்த ராஜபக்ஷவின் நியமனத்துக்கு ஆதரவாக இருந்தால், அவரது நியமனத்தை இல்லாது செய்யும் அதிகாரம் ஜனாதிபதி மைத்திரிக்கோ, பொதுச் செயலாளர் சுசிலுக்கோ இல்லை. இதுதான் மகிந்த ராஜபக்ஷவின் பலம்.

ஜனாதிபதித் தேர்தலின் போது, மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியிலிருந்து வெளிவந்து, எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்து, பொது வேட்பாளராகவே களமிறங்கினார். அத்தேர்தலின் போது சுதந்திரக் கட்சி உத்தியோகபூர்வமாக மகிந்தவுக்கே ஆதரவளித்தது. தேர்தல் வெற்றிபெற்று மைத்திரிபால ஜனாதிபதியான பின்பு, அவர் சுதந்திரக் கட்சியினதும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினதும் தலைவராக பதவியேற்றுக்கொண்டார். ஆனால், கடந்த அரையாண்டில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளையும் ஜனாதிபதி மைத்திரி செய்யவில்லை. அதன் விளைவாக தன்னுடைய சொந்தக் கட்சியினரை கட்டுப்படுத்தும் வல்லமை ஜனாதிபதியிடம் இல்லையோ என்ற ஐய நிலை உருவானது, இன்று அது வெளிப்படை உண்மையுமாகியுள்ளது.

ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தலில் அமைந்த பொது எதிரணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் ஜனாதிபதி மைத்திரி, அத்தோடு பொது எதிரணி இடைக்காலத்தில் ஒரு “தேசிய அரசாங்கத்தையும்” உருவாக்கியது. ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி என்ற இருநிலைப்பேதம் கலங்கிய ஒரு நிலையாகவே கடந்த 6 மாத கால ஆட்சி இருந்தது - சுருக்கமாக மஹிந்த ராஜபக்ஷவும் அவரது ஆதரவாளர்களும் எதிரணியாகக் கருதப்பட்டனர்.



இப்போது பொதுத் தேர்தல் வந்துள்ள நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஐ.ம.சு.கூட்டமைப்பும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐ.தே.க-வும் (நல்லாட்சிக்கான ஐக்கிய முன்னணி) போட்டியிடும் சூழலில், நல்லாட்சியின் முதல்வர்கள் இருவர் ஒருவரையொருவர் எதிர் கொள்ளவேண்டிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. ஐ.ம.சு.கூவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையேற்றுள்ளதால், ஏதோவொரு சந்தர்ப்பத்தில் தாம் நல்லாட்சிக்கென கொண்டுவந்த ஜனாதிபதியை விமர்சிக்க வேண்டிய சூழல் ஐ.தே. கட்சிக்கும் பொது எதிரணியின் ஏனைய கட்சிகளுக்கும் ஏற்படலாம்.

மேலும் நேர்மறையான அரசியலை விட, எதிர்மறையான அரசியல் இலகுவானது. அதுவே எமது அரசியலின் பொதுவான பழக்கம் ஆகிவிட்டது. அதாவது, தமது கட்சி என்னவெல்லாம் சாதிக்கும், தமது கொள்கை என்ன என்பதை எடுத்துரைப்பதிலும் எதிர்த்து நிற்கும் கட்சியின் பிழைகளை, அவர்களின் ஆட்சியின் தவறுகளைச் சுட்டிக்காட்டி தேர்தலை எதிர்கொள்ளல் என்ற நிலையேஇங்கு பொதுவாகக் காணப்படுகிறது.

இந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரியை விட, மகிந்த ராஜபக்ஷ வை விமர்சிப்பது சுலபம் என்பதுடன் அது வெற்றி பெற்ற சூத்திரமாகவும் பார்க்கப்படுகிறது. ஆகவே, ஐ.ம.சு.கூட்டமைப்பில் மகிந்த ராஜ பக்ஷ போட்டியிடுவதானது, ஐ.தே.க. உட்பட்ட ஏனைய எதிர்க் கட்சிகளுக்கு சாதகமாக அமைகிறது என்பதுடன், அது ஜனாதிபதி சிறிசேனவை விமர்சிக்க வேண்டிய தேவையை இல்லாதொழிக்கிறது.

ஆனால் மகிந்த ராஜபக்ஷவின் மீள்பிரவேசமானது நாடாளுமன்றத் தேர்தலாக இருப்பினும், இது ஐ.தே.க உட்பட்ட எதிர்க் கட்சிகளுக்கு மட்டுமல்லாது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் கூட பெருஞ்சவாலாகும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நல்லாட்சி கருதியோ, அல்லது தேர்தல் உபாயம் கருதியோ இதனை அனுமதித்திருந்தால் அவர் மிகப்பெரும் அபாயம் ஒன்றை ஏற்றிருக்கிறார்.

மாறாக ஜனாதிபதி மைத்திரிபால, முழு விருப்பின் பேரில் மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்திருப்பாரானால் அது அவர் ஜனவரி 8 அன்று தனக்கு வாக்களித்த மக்களுக்கும், “நல்லாட்சி” பிறக்க உழைத்த அனைவருக்கும் செய்யும் மிகப்பெரிய துரோகமாகும்.





நவாலி தேவர்கட்டு இருதய ஆண்டவர் ஆலய வருடாந்த திருநாளின் இறுதி நாள் நிகழ்வும் திருப்பலி பூசை வழிபாடுகளும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது... (66)

# தலைமைகள் உருவாவதை தடுக்கிறது கூட்டமைப்பு

## வித்தியாதரன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தங்களது பதவிகள் பறிபோய்விடும் என்பதற்காக சரியான தல்லமைகள் உருவாகுவதை விரும்பாது தம்மை தேர்தலில் இருந்து ஒதுக்கியுள்ளதாக வித்தியாதரன் தலைமையிலான சுயேட்சைக் குழுவினர் தெரிவித்தனர்.

வேட்புமனுத் தாக்கலின் பின்னர் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு பதிலளித்த வேளையிலேயே இவ்வாறு தெரிவித்தார். முனனைநாள் போராளிகளுக்கு புனர்வாழ்வில் இருக்கும் போது குடியுரிமைகள் பறிக்கப்படாத நிலையில், தெற்கில் உள்ள அரசு எம்மை ஜனநாயக ரீதியில் அங்கீகரித்த போதிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மாததிரமே எங்களது அரசியல் பாதையை தடைசெய்திருக்கிறது.

எனவே தடைகளை உடைத்து மக்களுக்குச் சேவைசெய்ய நாம் களமிறங்கியுள்ளோம்.

இதேவேளை செய்தியாளரின் கேள்விக்கு பதிலளித்த வித்தியாதரன் வீட்டிற்குள் முடங்கிக் கிடக்கும் முன்னாள் போராளிகளின் அச்சுறுத்தலுக்கும் தாம் பதிலளிக்க முடியாது எனத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் பாணியில்தான் தாம் அதிரடியாகத் தேர்தலில் குதிப்பதாகவும் தெரிவித்த வித்தியாதரன் முன்னாள் போராளிகளில் மரபணுப்பழக்கமாக திடீர் எனத் தேர்தலில் குதிப்பது சாதாரணம் என தெரிவித்த போதிலும், ஊடகங்கள் இதனைத் தவறாக அர்த்தப்படுத்தக் கூடாது எனவும் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு தாம் திரும்பத்திரும்ப பதிலளிக்க முடியாது எனவும் தான் இப்போது ஊடகத்தில் இல்லை எனவும் தெரிவித்த போதிலும் இறுதியில் ஒரு சந்தர்ப்பத்தில் தான் ஒரு ஊடகவியலாளர் எனத் தெரிவித்ததுடன் உங்களது கேள்விகள் ஊடகப்பாணியில் இல்லை எனத் தெரிவித்து யாழ்.செயலகத்தில் இருந்து சடுதியாக சென்றார். (இ)

# வீதி சீரின்மையால் பயணிகள் அசௌகரியம்

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் சங்கரப்பிள்ளை வீதியால் மேற்கே செல்லும் லோட்டன் வீதி பழுதடைந்துள்ளது.

அவ்வீதி வேலக்கைப்பிள்ளையார் ஆலயம் மற்றும் தேவாலயத்தைத் கடந்து நவாலி சங்கரத்தை பிரதான வீதியைச் சென்றடைகிறது.

அவ் வீதியில் பல இடங்கள் குண்டும் குழியுமாகக் கிடக்கிறது. வேலக்கைப் பிள்ளையார் ஆலய எதிராக லோட்டன் வீதியால் தெற்காகப் போகும் பழைய நவாலிப் புளியடிச் சந்தை வீதி மிக மோசமாப் பழுமடைந்து போயுள்ளது.

யுத்த காலங்களுக்கு முன்பிருந்தே செப்பனிடப்படாமல் கிடப்பதால் வீதிக்குப் போடப்பட்ட கற்களும் இன்றி வெறும் மண்தறையாகக் காணப்படுகிறது.

மழைகாலங்களில் மணல்தறையில் வெள்ளம் தேங்கி சேறு சகதி உருவாவதால் அவ்வீதியைப் பயன்படுத்தும் மாணவர், உத்தியோகத்தர், குடியிருப்பாளர் அனைத்துத் தரப்பினரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். (68)

# நல்லாட்சியை நிலை நிறுத்துவதற்கான சமூகவியல் கற்கை நெறி அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

நல்லாட்சியை நிலைநிறுத்துவதற்கான சமூகவியல் கற்கை நெறியொன்றை இலங்கை மக்கள் சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தவென 40 ஆண்டுகள் அனுபவம் பெற்ற தெற்காசிய ஆட்சி விஞ்ஞான பீடத்துடன் ஒன்றிணையுமாறு அந்த சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சான்றிதழுக்கான கற்கை நெறி முதல் பட்டதாரிகளுக்கான பாடத்திட்டம் வரை தகைமைகேற்ப பொருத்தமான விடயங்கள் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளை சமர்ப்பித்தலையும் கருத்திற்கொண்டு வசதிக்கேற்ப கற்கை நெறிக்கான காலத்தில் மாற்றங்களை செய்து கொள்ள முடியுமெனவும் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் மற்றும் சமூக மேம்பாட்டில் ஆர்வமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் மும்மொழிகளிலும் நடைபெறும் இப்பாடநெறிக்கான பதிவுக்கட்டணம் 5000 ரூபா எனவும் மக்கள் சபையின் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# குழுமோதலில் ஈடுபட்டோருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கொற்றாவத்தையில் அண்மையில் இரு விளையாட்டு குழுக்களிற்கு இடையில் மோதல் ஏற்பட்டதைத் தொடர்ந்து அதனுடன் சம்பந்தப்பட்ட 23 பேரை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ம.கணேசராஜா நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டிருந்தார்.

இவ் உத்தரவின் பின்னர் சந்தேக நபர்கள் கடந்த 5 ஆம் திகதி பதில் நீதவானின் முன்னிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் மீண்டும் நேற்றுமுன்தினம் விசாரணைக்காக நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது மாவட்ட நீதிபதி கணேசராஜா அவர்களை இன்று வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (18)

# கால்நடை திருட்டு

நெல்லியடி கரணவாய் பகுதியில் வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்ட பசுமாடு ஒன்று திருடப்பட்டுள்ளது.

அப் பகுதியைச் சேர்ந்த கிட்ணபிள்ளை கிஸ்ணகுமார் என்பவரின் வறுமை நிலையினை கருத்தில் கொண்டு வாழ்வாதார உதவியாக ரூபா 25,000 வழங்கப்பட்டது. அப் பணத்திற்கு பெறுமதியான பால் தரும் பசு ஒன்றினை வளர்த்து வந்துள்ளார்.

அதனை மேய்ச்சலுக்காக கட்டிய நிலையில் அப் பசு இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளது. இப் பசு கரவெட்டி கால்நடை வைத்தியசாலையில் காதிலக்கம் இடப்பட்ட பசு எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் வடமராட்சி பகுதியில் அண்மைக் காலமாக இவ்வாறான கால்நடைத்திருட்டுக்கள் அதிகரித்துள்ளன. (18)

## முரசின் இன்றைய பலன்

(15.07.2015 புதன்கிழமை)

ஐய வருஷம் ஆனி மாதம் 30 ஆம் திகதி.
சதுர்த்தசி திதி. சித்தம் யோகம்.
திருவாதிரை நட்சத்திரம் பிற்பகல் 02.59 வரை. பின் புனர்பூசம்
இராகு காலம் 12.00 - 01.30 வரை. சுபநேரம் 04.30 - 06.00 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
வெளிநாட்டு வாசத்தைக் கைவிட்டு குடும்ப சகிதம் தாயகத்தை நாட ஆரம்பித்தல்.

**ரிஷபம்**
அனுமதி பெறுவதற்காக அலைசலும் அகால வேளை உணவும் தக்கவைத்தல்.

**மிதுனம்**
இளைப்பாறிய பின்னரும் மீள் நியமனம் பெறும் முயற்சியில் ஈடுபடல்.

**கடகம்**
சமயோசித புத்தியினால் வரவிருந்த ஆபத்து விலகிவிடல்.

**சிம்மம்**
பிதாவின் தேகநலம் மேம்படுவதைக் கண்டு நிம்மதி பிறத்தல்.

**மீனம்**
குளவிகள், மந்திகள், மயிர்க் கொட்டிகளினால் ஆபத்து வருதல்.

**கன்னி**
களவு கொடுத்த நகைபற்றிய தகவல் அறிய மைபோட்டு பார்ப்பவரை அணுகல்.

**கும்பம்**
புதியமனை வாஸ்து சோதிட முறையில் அமைக்க ஆயத்தமாதல்.

**மகரம்**
பொறுமை சகிப்புத்தன்மையினால் ஏற்படவிருந்த பிரளயம் அற்றுப்போதல்.

**தனுசு**
புதிய கற்கை நெறிகளைப் பயில விரும்பிச் செயற்படல்.

**விருச்சிகம்**
தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப பார்ப்பதில் பெற்றோர் பிள்ளைகள் மத்தியில் முரண்பாடு ஏற்படல்.

**துலாம்**
கால்நடைகளினால் பயிர்கள் சேதமானதைக் கண்டு வேதனைப்படல்.

# போதைப்பொருள் எதிர்ப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு



(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் எதிர்ப்பு மாதத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட புனர்வாழ்வு இணைவு காரியாலயத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வு நேற்று யாழில் இடம்பெற்றது.

நேற்றுக் காலை யாழ். மத்திய கல்லூரியிலும் நண்பகலில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் இவ்விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

யாழ். மாவட்ட புனர்வாழ்வு இணைப்பு அதிகாரி மேஜர் கே.சி. ஜெகத்குமார தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண புனர்வாழ்வு இணைப்பு அதிகாரி கமிடோன் கலந்து கொண்டிருந்தார்.

மாணவர்கள், பெற்றோர்கள் பெருமளவில் கலந்து கொண்ட இந்நிகழ்வில் புகைத்தல், மதுபாவனையால் ஏற்படக் கூடிய விளைவுகள், நோய்கள் குறித்த விளக்கம் வழங்கப்பட்டதுடன் மதுபாவனையால் மாணவர்கள் எதிர்கொள்ளும் உள, உடல் ரீதியான தாக்கத்தை எடுத்துக் கூறும வகையிலான நாடகமும் காட்சிப்படுத்தப்பட்டது.

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்திலுள்ள முன்னாள் போராளிகளினால் இந் நாடகம் அரங்கேற்றப்பட்டது.(இ)

# தர்மாசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)


இந்து தர்மாசிரியர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விணணப்பங்களை இலங்கை பரிட்சைகள் திணைக்களம் கோரியுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை பதிவு செய்யப்பட்ட அனைத்து அறநெறிப் பாடசாலைகளுக்கும் தபால் மூலம் அனுப்புவதற்கான ஒழுங்குகள் மேற்கொளளப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பம் கிடைக்கப் பெறாத அறநெறிப் பாடசாலைகளின் முதல்வர்கள் எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையை குறிப்பிட்டு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம் பெலவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக நடைபெறவுள்ள பரீட்கைக்கு தனிப்பட்ட ரீதியில் விண்ணப்பிக்க முடியாதெனவும், அறநெறிப் பாடசாலையின் ஊடாகவே விண்ணப்பிக்க முடியுமெனவும் இம்மாதம் 27 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பழுதடைந்த கால்வாயை புனரமைக்கக் கோரிக்கை



(வவுனியா)


வவுனியா பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றுக்குச் செல்லும் பாதையில் உள்ள வடிகால் நீர் வழிந்தோடாது உள்ளதால் நோயத் தாக்கம் ஏற்படும் அபாயத்துடன் காணப்படுகின்றது.

இப் பாதையினூடாகவே வவுனியா பேருந்து நிலையத்திலிருந்து வருகை தரும் அதிகளவானோர் பயணம் செய்வதனால் குறித்த வாய்க்காலினை சீர் செய்வதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (66)

# ஆயுர் வேதம்

## பிறந்த குழந்தை அறிவாளியாக வளர!





மனதிற்கு சத்வம், ரஜஸ், தமஸ் என்று மூன்றுவித குணங்கள். சத்வம் என்ற குணத்தினால் வித்தைகளை எளிதில் அறியும் ஆற்றல், அறிந்த வித்தைகளை மறக்காமல் இருக்கும் சாமர்த்தியம் முதலிய சக்திகள் மனதிற்கு ஏற்படுகின்றன.

மனதின் இந்த விசேஷ சக்தியைத் தான் மேதை என்பர். மேதை எவ்வளவுக்கு எவ்வளவு நன்றாக மேன்மையடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்த மனிதன் மேலாகிறான்.

ஆயுர்வேதமும் தர்ம சாஸ்திரமும் மனிதருடைய மூளை சக்தியின் வளர்ச்சிக்குப் பிறந்த நிமிடம் முதல் பல உபாயங்களை கடைப்பிடிக்க வற்புறுத்துகின்றன. மூளையின் நாடிகள் தாதுக்கள் விரிவைத் துவங்கும் முன்பு தூய்மையான விரிவையே பெறுவதற்கு உதவும்படியாக குழந்தைக்குப் பிறந்தது முதலிலேயே உணவு, மருந்து, மூலிகை குளியல், மந்திரப் பிரயோகங்களை உபயோகிக்க சாஸ்திரங்கள் போதித்துள்ளன. இதற்கு மேதா ஜனனம் என்று சொல்லுவர்.

தாமிரக் கலப்பில்லாத சொக்கத் தங்கத்தின் ஒரு சிறு துண்டை தர்ப்பத்தினால் முடிந்து கொண்டு, சுமார் 10 –12 துளி சுத்தப் பசு நெய்யும் 5 – 6 துளி தேனும் கலந்து ஒரு தங்கம் அல்லது வெள்ளிப் பாலாடையில் வைத்து அதில் தங்கத் துண்டை நன்றாய் அழுத்தி உரைத்து குழந்தையின் வாயில் அந்த நெய், தேன் கலவையை மெதுவாய் தடவி உட்கொள்ளச் செய்ய வேண்டும். ஒரு நாளில் மூன்று தடவை இதுபோல தொடர்ந்து செய்யலாம்.

**மேதாஜனனம் வேறுமுறைகள்:** ஐந்திரீ எனப்படும் பேய்க்கும்மட்டி வேர், ப்ராஹ்மீ எனப்படும் ப்ரம்மி வழுக்கையின் இலை, சங்கபுஷ்பீ என்ற மூலிகையின் வேர், வசம்பு இந்த நான்கையும் தனித்தனியே கடுகளவு அரைத்து இந்த விழுதையும் 10 துளி பசுநெய் 5 துளி தேனையும் சுய தங்கத்தினால் செய்த ஓர் அரசிலையில் வைத்து தேய்த்து தர்ப்பத்தினால் தோய்த்து புத்தியினுடைய வளர்ச்சிக்காக குழந்தைக்கு சிறிது சிறிதாக ஊட்ட வேண்டும்.

ஒரு வசம்பு துண்டைச் சில மணிநேரம் பசுவின் பாலில் ஊற வைத்தால் மிருதுவாகும். இதில் ஒரு தங்கக் கம்பியின் ஊசி போன்ற நுனியால் சொருகி வசம்பின் மத்தியில் அடித்துச் சொருகி வைத்துக் கொள்ளவும். மாத்திரை மருந்து அரைப்பதற்காக உள்ள ஒரு சிறு குழவியுடன் கூடிய வழவழப்பான அம்மியில் சில துளிகள் முலைப்பால் வைத்து அதில் தங்கக் கம்பியும், வசம்பும் அரைபடும்படியாக உரைத்துக் கலக்கி அப்பாலை குழந்தைக்குக் கொடுக்கவும்.

வசம்பு, தங்கக்கம்பி உரைத்து குழந்தைக்கு பிறந்தநாள் முதல் முதலாண்டு முடிந்து பிறந்தநாள் வரும் வரையில் தினசரி கொடுக்கும் பழக்கம் கேரளத்தில் பழைய வழக்கங்களைக் கடைப்பிடிக்கும் இல்லங்களில் இன்றும் இருக்கிறது.

தங்கக் குச்சியை வசம்புத் துண்டில் அடித்து வைத்துக் கொண்டு, வசம்பையும் தங்கத்தையும் உரைத்துக் கொடுக்கும் முறையில் சில இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. வசம்பிலிருந்து தங்கக்கம்பி அடிக்கடி நழுவிவிடுகிறது. அரைப்பில் வசம்பு விழுதின் அளவு கண்டுபிடித்தல் சிரமமாயிருக்கிறது. வசம்பின் அளவு அதிகமானால் குழந்தைக்கு உமட்டல், வாந்தி ஏற்படும். அதனால் கவனம் தேவை.

இதை விட நல்லமுறையானது சுமார் 12 கிராம் வசம்பை துண்டுகளாக நறுக்கி ஆறு மணிநேரம் பசும்பாலில் ஊறவைத்து வெந்நீரால் கழுவி வெயிலில் உலர்த்தி தூளாக்கி துணியால் அரித்து கண்ணாடிப் போத்தலில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும்.

தங்கத்தினால் செய்த சிறுபாலாடையில் நெய், தேன், முலைப்பால் இவற்றைச் சில துளிகள் சேர்த்து அதில் மேற்படி வசம்பு சூரணம் சிறுபயறு அளவு சேர்த்து, குழவியினால் 3 நிமிடங்கள் நன்றாய்த் தேய்க்கவும், அதைக் குழந்தைக்கு ஊட்டவும்.

இவ்விதம் தொடர்ந்து ஒரு வருட காலம் தினசரி செய்ய வேண்டும். வசம்பு சூர்ணத்தின் அளவை மாதத்திற்கு 3 கடுகளவு வீதம் கூட் டலாம்.

இதற்கு உபயோகிக்கும் தங்கப் பாலாடை அல்லது கிண்ணம் அதிக வழவழப்பாக இருக்கும்படி தேய்த்துப் பொலிஷ் போட்டிருக்கக் கூடாது. கொஞ்சம் சொரசொரப்பாக இருப்பின் தங்கம் சேர்ந்து மருந்துடன் இழைபடுவதற்கு எளிதாக இருக்கும்.

மேற்குறிப்பிட்ட மூலிகைகளுடைய சிறப்பான மருத்துவ குணங்களால் குழந்தைக்கு அறிவுத்திறன் மேன்மையாக வளரும் என்று கண்டு பிடித்தது ஆயுர்வேதத்திற்கே உரிய தனிப்பெருமை.

# பெரும்பான்மை அரசாங்கமாக மாற்ற ஐ.தே.கவுடன் மக்கள் அணிதிரள்வு

## ரோசி சேனாநாயக்க



(கொழும்பு)

சிறுபான்மை பலத்தைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு, ஐ.தே.கட்சியை பெரும்பான்மை அரசாங்கமாக மாற்ற மக்கள் அணிதிரண்டுள்ளதாக அமைச்சர் ரோசி சேனா நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான கொழும்பு மாவட்ட வேட்புமனுவை நேற்றுமுன்தினம் மாவட்ட செயலகத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கடந்த 150 நாட்களில் நாம் வழங்கிய வாக்குறுதிகளில் 99 வீதமானவற்றை முடித்துள்ளோம். இதில் 18ஆவது திருத்தச்சட்டத்தை நீக்கி மக்களின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் 19ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தியமை விசேட அம்சமாகும்.

அதேபோல், ஔடத சட்ட மூலம், கல்வியாளர்களைக் காப பற்றும் சட்டமூலம் என்பவற்றையும் கொண்டு வந்துள்ளோம். சிறு அதிகாரம் கொண்ட அரசாங்கத்தை வைத்து இந்த அனைத்தையும் நாம் செய்து முடித்துள்ளோம்.

சிறுபான்மை அதிகாரம் கொண்ட நாம் பெரும்பான்மை அரசாங்கமாக மாற்றும் ஒரு உறுதியான அதிகாரத்தை வழங்க மக்கள் அணிதிரண்டுள்ளனர். அதன் முதற்கட்ட வெற்றியாகவே நாம் இந்த வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளோம்.

எனவே ஊழல், மோசடியான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிற்கு சந்தர்ப்பம் வழங்காமல மக்கள் தங்களது பெறுமதிமிக்க வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்திற்கு செலுத்த வேண்டும்" என்றும் கேட்டுக் கொள்கின்றேன் என்றும் குறிப்பிட்டார்.

# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?



## சிம்மம்

*(மகம், பூரம், உத்தரம் 1,2)*

அர்த்தாஷ்டமச்சனி (4) நடைபெறுகின்ற உங்களுக்கு 16.12.2017 வரை முயற்சிகளில் சோதனைகள் ஏற்படினும் வியாழன் 05.07.2016 வரை ஜென்மத்தில் நின்று ஆறுதலையும் நிம்மதியையும் வழங்க முற்படுவார். காணாமற போனோர் பற்றிய தகவல் கசியும்.

கன்னியர், சிறுவர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு முகங்கொள்ளலாம். புதிய நட்பினை முளையிலேயே கிள்ளிவிடுங்கள். நாட்பட்ட கடன் தெய்வசெயலாக வந்தடையும். வெளியூர் பயணத்தைத் தற்காலிகமாக கைவிடுங்கள். இராகுகேது என்பன 09.01.2016 வரை 2ஆம், 8ஆம் நிலையிலும் பின் 1 1/2 ஆண்டுக்கு 01இல், 7இல் நிற்பதினால் கண்ணிற்கு வருகின்ற துன்பம் புருவத்துடன் சென்று விடும்.

மின்சாரம் நீர்த்தத்தில் கவனமெடுங்கள். குழந்தைப் பாக்கியம் அடுத்த வியாழமாற்றத்தின் பின் ஏற்படலாம். மாதாவின் தேகநலத்தில் கவனமெடுங்கள். அநாமதேய தொலைபேசி மிரட்டலினால் அச்சமும் பதகளிப்பும் தோன்றும். காலாவதியான மருந்து வில்லைகளால் தேகநலம் பாதிக்கப்படும். பழைய மனையைப்புதுப்பிக்கும் கைங்கரியங்களில் ஈடுபடுவர். சுவீப் அதிர்ஷ்ட முண்டாகலாம்.

ஜோதிர் வித்யா ரத்னா
சாமஸ்ரீ தேச மானிய
வி.ஏ.சிவராசா
(அரச விருது பெற்ற ஜோதிடர்)



# இரு பொலிஸ் நிலையங்கள் அமைக்க 660 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இரண்டு பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வடக்கில் சிவில் நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யுத்தம் இடம்பெற்ற பகுதியில் இரண்டு பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் இந்த இரண்டு பொலிஸ் நிலையங்களும் அமைக்கப்பட உள்ளன.

பொலிஸ் நிலையங்களை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரண்டு பொலிஸ் நிலையங்களை அமைப்பதற்கு 660 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# மகிந்த ராஜபக்ஷவின் காலம் முடிவடைந்து விட்டது

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலம் முடிவடைந்து விட்டதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் குருனாகல் மாவட்டத் தலைவர் நான். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மாவட்டத் தலைவர் மகிந்த ராஜபக்ஷ.

எனது வாழ்நாளில் நான் ஒருபோதும் மகிந்தவுடன் பொதுத் தேர்தலில் போட்டியிட நேரிடும் என கருதவில்லை.

வீழ்ச்சி ஏற்பட்டு விட்டால் அதனை யாராலும் தடுக்க முடியாது. வளர்ச்சி ஏற்பட்டாலும் அப்படித்தான். மகிந்தவின் காலம் முடிவ டைந்து விட்டது. தேர்தலில் போட் டியிட்டு வெற்றியீட்டினாலும் மகிந்த இங்கு இருப்பாரா? நாம் தானே இந்த மாவட்டத்தில் இருக்கப் போகின்றோம்.


மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் நாடகத்தின் இறுதிக் காடசிகள் குருனாகலில் அரங்கேற்றப்பட உள்ளன. மிகவும் கஷ்டப்பட்டு குருனாகலில் அவர் இந்த நாடகத்தை நடிக்க உள்ளார் என அவர் மஹாவ பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

# 17 மாவட்டங்களில் பொதுஜன பெரமுன போட்டி

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக பொதுபல சேனா அமைப்பின் அரசியல் கட்சியான பொது ஜன பெரமுன, 17 மாவட்டங்களில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளது. கொழும்பு மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக விதாரந் தெனியே நந்த தேரர் போட்டியிடுவதுடன் களுத்துறை மாவட்டத்தின் முதன்மை வேட்பாளராக கலகொட அத்தே ஞானசார தேரர் போட்டியிடுகிறார். கம்பஹா மாவட்டத்தின் முதன்மை வேட்பாளராக பொதுபல சேனா அமைப்பின் நிறைவேற்று அதிகாரி திலந்த வித்தானகே போட்டியிடுகிறார்.

பொதுபல சேனா அமைப்பின் பொது ஜன பெரமுன சார்பில் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலில் மூன்று பிக்குமார் இடம்பெற்றுள்ளனர்.









# கண்டியில் ஐ.தே.க. சார்பாக ரவூப் ஹக்கீம் போட்டி



(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், மு.கா. தலைவர் ஹக்கீம், கண்டி மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சி சார்பாக போட்டியிடுகின்றார்.

ரவூப் ஹக்கீம் வேட்புமனு வினைத் தாக்கல் செய்ததன் பின்னர், கண்டி மீராம் மக்காம் பள்ளி வாசலுக்குச் சென்று தொழுகை, பிரார்த்தனையில் ஈடுபட்டதோடு, ஆதரவாளர்க ளையும் சந்தித்துப் பேசினார்.

கண்டி மாவட்டத்தில் ஐ.தே.கட்சி சார்பில் 15 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் இருவர் மட்டுமே முஸ்லிம்களாவர்.

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................


முகவரி :- ..............................


பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்


..............................


பெற்றோர் கையொப்பம்

36. 
இவ்வுருவில் உள்ள உபகரணத்தைப் பயன்படுத்துவதன் மூலம்
1) மழைவீழ்ச்சியை அறியலாம்
2) காற்று வீசும் திசையை அறியலாம்
3) வானிலை பற்றி முன்கூட்டியே அறியலாம்
4) மழை பற்றி முன் கூட்டியே அறியலாம்

37. 
அருகில் தரப்பட்ட பிராணியின் விளையாட்டு எதனை வெளிக்காட்டுகிறது
1) கழுகு போல் பறத்தல்
2) ஒட்டகம் போல் நடத்தல்
3) யானை போல் நடத்தல்
4) நண்டு போல் நடத்தல்

38. 
இப்படத்தில் காணப்படும் பெரியாரின் பெயர் என்ன?
1) டி.எஸ்.சேனநாயக்க
2) சேர்.டி.பி.ஜயதிலக
3) அறிஞர் சித்திலெப்பை
4) அநாகரிக தர்மபால

39. 
அருகில் தரப்பட்டுள்ள வித்துக்கள் எவ்வாறு பரம்பலடைகின்றன முறையே
1) காற்று, விலங்கு
2) காற்று, காற்று
3) விலங்கு, விலங்கு
4) காற்று, நீர்

40. 
தரப்பட்டுள்ள தையல் முறை எதற்குப் பயன்படுகின்றது
1) அலங்காரத் தையலுக்கு
2) மடிப்புக் குலையாமல் இருக்க
3) கம்பளித்துணியைத் தைக்க
4) ஓரங்களை மடித்துத் தைக்க

41. 
அருகில் தரப்பட்டுள்ள வீதிக்குறியீடு எதனைக் குறிக்கிறது
1) சிறுவர் கடவை முன்னால்
2) பாதசாரி கடவை முன்னால்
3) வாகனத்தரிப்பிடம்
4) பஸ்தரிப்பிடம்

நேற்று பிரசுரமாகிய வினாக்களுக்கான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (01) 01. 1 | 02. 2 | 03. 1 | 04. 1 | 05. 1 | 06. 2 | 07. 1 |
| 08. 1 | 09. 3 | 10. 2 | 11. 1 | 12. 3 | 13. 4 | 14. 1 |
| 15. 3 | 16. 1 | 17. 4 | 18. 2 | 19. 2 | 20. 2 | 21. 4 |
| 22. 1 | 23. 1 | 24. 1 | 25. 1 | 26. 1 | 27. 1 | 28. 1 |
| 29. 2 | 30. 1 | | | | | |

(02) 31. வரும் 32. பாடமாக 33. சென்றோம்
34. கட்டுரை 35. I. கொக்கு II. ஈட்டி போன்ற நீண்ட அலகுகள்
III. பூகம்பம் வருவதை முன்னரே உணர்ந்து விடும் IV. படபட V. எச்சரிக்கையாகி விடுகிறார்கள்
VI. உணவு/ சாப்பாடு / ஆகாரம் VII. பிடிவாதம் பிடித்தல் VIII. நீண்ட / கூர்மையான
IX. பூகம்பம் 36. I. மனநிறைவு எப்பொழுதும் உயர்வானது ஆகும்
II. மரியாதை இராமன் தந்திரம் செய்தார் 37. I. சவர்க்காரமும் II. பிரயாணம் III. காய்ச்சல்

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்**



தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - II
1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க


01) மழைநாள் ஒன்றில் நீர் காணக்கூடிய காட்சிகள் மூன்றை நிகழ்காலத்தில் எழுதுக (ஒவ்வொரு வசனத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும் எழுவாய், பயனிலைத்தொடர்புகள் சரியாக இருக்க வேண்டும்)

1. ........................................

2. ........................................


3. ........................................

02) காட் இலக்க அட்டைகள் ஐந்தையும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகச்சிறிய எண் யாது?




..................

03) உருவில் ஓர் ஐஸ்கிறீம் காணப்படுகின்றது அதன்




(i) உச்சிகளின் எண்ணிக்கை யாது? ..............................

(ii) முகங்களின் எண்ணிக்கை யாது? ..............................

04) 8098 உடன் 902ஐக் கூட்டுக கூட்டுத்தொகை யாது? ..............................

05) 6036 இல் இருந்து 910 ஐக் கழிக்க வித்தியாசம் யாது? ........ ..............................

06) ஓர் ஆரம்பப் பாடசாலையில் . ளைகள் சாப்பிடும் உணவுகள் பற்றிய தகவல்கள் வரைபில் காணப்படுகின்றன





(i) இடியப்பம் , றோல்ஸ் சாப்பிடும் மாணவர்களுக்கிடையே உள்ள வித்தியாசம் யாது?

........................................

(ii) றொட்டி சாப்பிடும் மாணவர்களின் எண்ணிக்கை ஆனது பாண் சாப்பிடும் மாணவர்களின் எண்ணிக்கையின் அரைவாசியாகும் அவ்வெண்ணிக்கையை உரிய நிரலில் குறித்து நிரலை நிழற்றுக


........................................

07) A பாத்திரத்தில் உள்ள நீரில் இருந்து $1\frac{3}{4}$ l நீர் வெளியே எடுக்கப்படுகிறது அது B எனும் பாத்திரத்தில் சேர்க்கப்படுகிறது எனின் A யில் மிகுதியாக உள்ள நீரின் கனவளவு யாது?





..................

08) காட்டப்பட்டுள்ள உருவின் சுற்றளவு யாது?




..................

09) வழங்கப்பட்டுள்ள சதுரக்கோட்டுப்படம் சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன அதன் மொத்தப்பரப்பளவில் 1/2 பகுதியை நிழற்றுக?



10) ரூ.17.50 விலையுள்ள சவர்க்காரம் இரண்டும் ரூ 10.25 விலையுள்ள பற்றூரிகை ஒன்றும் வாங்குவதற்கு மாலாவிடம் ரூ50.00 உள்ளது அவளுக்கு மீதியாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு?

........................................................................................................


11) 648 லட்டுக்கள் 6 பைக்கற்றுக்களில் சமமாக அடுக்கப்பட்டன ஒரு பைக்கற்றிலுள்ள லட்டுக்களின் எண்ணிக்கை யாது?

........................................................................................................

12) ஒரு குவளையில் உள்ள பாலின் கனவளவு 250 மில்லிலீற்றர் ஆகும். இத்தகைய ஒரு டசின் குவளைகளில் உள்ள பாலின் கனவளவு யாது?

........................................................................................................

13) இக்கடிகாரத்தின் முகத்தை அவதானியுங்கள் மணித்தியாலக் கம்பிக்கும் நிமிடக்கம்பிக்குமிடையே உள்ள கோணம் அடுத்து எவ்வளவு நிமிடத்திற்குப் பின்னர் நேர்கோணமாக இருக்கும்?




..................

14) ஒரு புகையிரதத்தில் பயணம் செய்யும் ஆண்களின் எண்ணிக்கை 490 ஆகும். அதில் பயணம் செய்யும் பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையிலும் பார்க்க 70 குறைவாகும். அதில் பயணம் செய்யும் சிறுவர்களின் எண்ணிக்கை பெண்களின் எண்ணிக்கையிலும் பார்க்க 80 அதிகமாகும் அப்புகையிரதத்தில் பயணம் செய்த ஆண்கள், பெண்கள் சிறுவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

........................................................................................................

(02) 15 - 26 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக

15) தனது வாலைச் சிலிர்த்து எதிரியை பயங்காட்டும் பிராணி எது?
1) அணில் 2) பூனை 3) பாம்பு 4) முயல்

16) பூமியின் ஒரே ஒரு துணைக்கோள் எது?
1) சந்திரன் 2) சுக்கிரன் 3) செவ்வாய் 4) புதன்

17) முட்கள் காணப்படாத தாவரம் எது?
1) போகன்விலா 2) காசித்தும்பை 3) றோசா 4) தூதுவளை

18) புரதமும் காபோவைதரேற்றும் போதிய அளவு கிடைக்காததால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) மரஸ்மஸ் 3) தொண்டைக்கரப்பான் 4) கண்டமாலை

19) காந்தத்தினால் கவரப்படாத பொருள் எது?
1) செப்புப்பாத்திரம் 2) தையல்ஊசி 3) சவரஅலகு 4) இரும்புத்தூள்

20) உணவுவகைகளை நீண்ட காலம் பழுதடையாது பாதுகாக்கும் முறை எது?
1) உப்பிடல் 2) வினாகிரி இடல் 3) குளிரூட்டல் 4) உலர்த்தல்



21. கீரைவகைகளை அரிந்த பின் நீரில் கழுவுவதால் இழக்கப்படும் போசனை எது?
1) விற்றமின் C 2) கல்சியம் 3) புரதம் 4) பொஸ்பரஸ்

22. வாயினுள் தனது குஞ்சை எடுத்துச் சென்று பாதுகாக்கும் மீன் எது?
1) பாரை 2) திலாப்பியா 3) சூரை 4) சுங்கான்

23. பூக்காத தாவரம் பின்வருவனவற்றுள் எது?
1) பன்னம் 2) மாதுளை 3) வாழை 4) பனை

24. மனிதன் தனது வயிற்றில் உள்ள குடற்புழுக்களை அகற்ற உட்கொள்ளும் தாவரம் எது?
1) துளசி 2) வேப்பிலைத் துவையல்
3) கற்றாளை 4) குப்பைமேனி

25. ஒலிம்பிக் கொடியில் காணப்படும் ஐந்து நிறங்களைக் கொண்ட வட்டத்தில் ஆசியாக்கண்டத்தை குறிக்கும் வட்டத்தின் நிறம் யாது?
1) மஞ்சள் 2) கறுப்பு 3) நீலம் 4) பச்சை

26. இலங்கை நாட்டுக்கே உரிய பிராணி எது?
1) சருகுமான் 2) மயில் 3) யானை 4) செண்பகம்


(03) 27 - 32 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடைக்குரிய ஆங்கில எழுத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக (ஒவ்வொரு இடத்தில் இருந்தும் பெறக்கூடிய சேவை எதுவெனக் கண்டு அதற்கு எதிரே எழுதுக)

| இடம் | | சேவை |
|---|---|---|
| 27. மாவட்டசெயலகம் | ☐ | G - பிறப்புச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் |
| 28. பொலிஸ் நிலையம் | ☐ | H - மரப்பலகை வெட்டுவதற்கு அனுமதிப்பத்திரம் பெறல் |
| 29. மாவட்டத்தேர்தல் ஆணையாளர் அலுவலகம் | ☐ | I - தென்னைப் பயிர்ச்செய்கைக்கான பசளையை அறிந்து கொள்ளல் |
| 30. வங்கி | ☐ | J - வாக்காளர் இடாப்பில் பிரதி ஒன்றைப் பெற்றுக்கொள்ளல் |
| 31. விவசாயிகள் சேவை | ☐ | K - காணாமற் போன அடையாள அட்டை பற்றிய அறிக்கையை பதிவு செய்தல் |
| 32. பிறப்பு, இறப்பு திருமணம் பதிவு செய்தல் அலுவலகம் | ☐ | L - சேமிப்புக்கணக்கொன்றை ஆரம்பித்தல் |

33. இலங்கையில் உள்ள மிகப்பெரிய குளம் எது?
1) சேனநாயக்கா சமுத்திரம் 2) கலாவாவி
3) பராக்கிரம சமுத்திரம் 4) மின்னேரியாக்குளம்


34. மயிர்க்கொட்டிப் புழுக்களின் உணவு யாது?
1) பழங்கள் 2) இலைகள் 3) தானியங்கள் 4) பூச்சிகள்

35. உருவில் காணப்படும் நிழல் பறவையின் பெயர் என்ன?



1) தேன்சிட்டு
2) இருவாச்சி
3) குயில்
4) கிளி

# தேர்தல் களம்



## மக்களின் மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுவோம்

### டக்ளஸ் தேவானந்தா



எமது மக்களின் மேம்பாட்டிற்காகவும் உயர்விற்காகவும் நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற தயாராக இருக்கின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். யாழ்திருநெல்வேலியிலுள்ள வடமாகாண தேசிய கிறிஸ்தவ ஒன்றியத்தில் அதன் பிரதிநிதிகளுடனான நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமூக மேம்பாட்டிற்காகவும் அபிவிருத்திக்காவும் தேசிய கிறிஸ்தவ ஒன்றியம் முழுமையான பங்களிப்பையும் சேவையையும் வழங்கவேண்டியது அவசியமானது. கடந்த காலங்களில் எமது மக்கள் அளவிட முடியாத துன்ப துயரங்களுக்கு உள்ளாக நேர்ந்தமைக்கு தவறான தமிழ் அரசியல் தலைமைகளின் வழிநடத்தல்களே காரணமாக அமைந்திருந்தன.

கடந்த காலங்களில் கிடைக்கப்பெற்ற பல சந்தர்ப்பங்களை தமிழ்த் தலைமைகள் சரியாக நடைமுறைப்படுத்தவில்லை. தென்னிலங்கையில் மாற்றம் ஏற்பட்டாலும் வடபகுதியில் தமிழ்த்தலைமைகளில் மாற்றம் ஏற்படாத வரையில் எமது மக்களுக்கு எதுவும் ஒருபோதும் கிடைக்கப் போவது இல்லை. இந்நிலையில் என் மீதும் என் கட்சி சார்ந்தும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அரசியல் உள்நோக்கம் கொண்டவை. இவ்விடயம் தொடர்பில் பல உண்மைகள் வெளிவரத் தொடங்கியுள்ள நிலையில் மேலும் பல உண்மைகளும் புலப்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் ஒன்றியத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்ட செயலாளர் நாயகம் அவை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்தார். இதனிடையே அங்கு கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் டக்ளஸ் தேவானந்தா பதிலளித்தார்.

## மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகளை நாம் ஒருபோதும் தட்டிக்கழித்ததில்லை

### ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளர்

(யாழ்ப்பாணம்)

மக்களுக்கு வழங்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் செயலாளர் நாயகம டக்ளஸ் தேவானந்தா தலைமை மற்றும் வழிகாட்டல்களுடன் திறம்படச் செயற்படுத்தி வந்திருக்கின்றோம். இதே போன்று மேலும் தொடர வேண்டுமாயின் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் எம்க்கு ஆதரவுப் பலம் தரும் பட்சத்தில் தொடர்ந்தும் முன்னெடுக்கத் தயாராக இருக்கின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளரும்,வேட்பாளருமான ஐயாததுரை சிறிரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வடக்கு, வல்வெட்டித்துறை, கம்பர்மலை கலாவாணி சனசமூக நிலைய முன்றிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னைய காலங்களில் இப்பகுதியிலுள்ள பொதுஅமைப்புகள் பலவற்றுக்கு எமது கட்சியின் ஊடாக நாம் நிதியுதவிகளை வழங்கியுள்ளோம் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். அந்த வகையில், நடைபெறவுள்ள நாடாளுமன்றத்தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாமும் போட்டியிடும் இத்தருணத்தில் மக்கள முழுமையான ஆதரவுப் பலத்தை எமக்குத் தரவேண்டும். அவ்வாறு தரும் பட்சத்தில், செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலும் வழிகாட்டலிலும் கடந்த காலங்களைப் போன்று எதிர்காலங்களிலும் இப்பகுதி மக்களது வாழ்வாதார, பொருளாதார மேம்பாட்டிற்காகவும், இப்பகுதியில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுக்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நாம் மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகளை ஒருபோதும் தட்டிக்கழித்ததில்லை. அவற்றை முடியுமான வரையில் செயற்படுத்தியுள்ளோம் என்பதை மக்கள் நன்கறிந்து கொள்வார்கள். ஆனால், தேர்தலுக்காக மட்டும் கூட்டுச்சேர்ந்துள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு மட்டுமே செயற்பட்டு வருகின்றதேயொழிய, அவர்கள் மக்கள் நலன் சார்ந்த எவ்விதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை என்றும் சுட்டிக்காட்டிய ரங்கன் அவர்கள், எமது மக்கள் கூட்டமைப்பினரின் உணர்ச்சிப் பேச்சுக்களுக்கும் உசுப்பேற்றல்களுக்கும் இனி வரும் காலங்களில் இடம் கொடுக்காது வருகின்ற தேர்தலில் அவர்களுக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதில் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கும் போது, 1987ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தியிருந்தால் அப்போதே சுயநிர்ணய உரிமைகளைப் பெற்றிருக்க முடியும். இவ்வாறாக, கிடைக்கப்பெற்ற பல சந்தர்ப்பங்களை கடந்தகால தமிழ் அரசியல் தலைமைகள் உரிய முறையில் பயன்படுத்தவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். இதன்போது, அங்கு பொது மக்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் செயலாளர் நாயகம் விளக்கமளித்தார்.

இதனிடையேஇ 2ஆம் குறுக்குத்தெரு நரசிங்கர் வீதி பருத்தித்துறையிலும் மக்கள் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதன்போதும் மக்களது தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டு, ஆராயபட்ட அதேவேளை, அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பிலும் அவதானம் செலுததப்பட்டது.

அத்துடன், நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை உரிய முறையில் பயன்படுத்தி எமது கட்சிக்கு வெற்றி வாய்ப்பை மக்கள் தரும் பட்சத்தில் அவற்றை நாம் எளிதாகத் தீர்த்து வைக்க முடியுமென ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

## ஒப்பந்தங்கள் செய்தே ஐ.தே.க.வுடன் இணைந்துள்ளோம்

### வன்னி முதன்மை வேட்பாளர் முத்தலிபாபா

ஐக்கிய தேசியக்கட்சியுடன் நாம் ஒப்பந்தங்களைச் செய்தே இணைந்துள்ளோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் முதன்மை வேட்பாளருமான முத்தலிபாபா பாரூக் தெரிவித்தார்.

வேட்புமனு தாக்கல் செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், வன்னி மாவட்டத்தின் தனித்துவத்தை பாதுகாப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடுகின்றது. அதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்திலும் தனிமையாகப்போட்டியிடுகின்றோம். அத்துடன் ஏனைய மாவட்டங்களில் நல்ல அரசாங்கத்தை உருவாக்குவதற்காக ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து போட்டியிடுகின்றோம்.

கடந்த அரசாங்கத்தில் காணப்பட்ட தேசிய ரீதியிலான இன முறுகல் மற்றும் சிறுபான்மையினர் பாதிக்கப்பட்டமை மற்றும் உரிமைகள் மறுக்கப்பட்டமைக்கு எதிராகவும் சிறுபான்மையினருக்கு இந்த அரசாங்கத்தில் உரிமைகள் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் எங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைத்து இத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் எமது கட்சி ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இதற்கும் முன்பும் நாங்கள் சேர்வதற்கான நிபந்தனைகளை வைத்துள்ளோம். முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியாக நாம் இருந்தபோதிலும் வடக்கு கிழக்கு மற்றும் அவை தவிர்ந்த பிரதேசங்களில் அவர்களின் அரசியல் அபிலாசைகள் சரியான முறையில் வழங்கப்பட வேண் டும் என்ற ரீதியில் நாம் சேர்ந்திருக்கின்றோம் என்றார்.

## ஊழலற்ற நல்லாட்சியை ஐக்கிய முன்னணி ஏற்படுத்தும்

### றிஷாட் பதியுதீன் நம்பிக்கை

ஐக்கிய தேசிய முன்னணி ஊழலற்ற நல்லாட்சியை ஏற்படுத்தும் என ஐக்கிய தேசிய முன்னணியின் வன்னி தேர்தல் தொகுதி முதன்மை வேட்பாளரான றிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வேட்பு மனுவை தாக்கல் செய்ததன் பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர், இனம், மதம் பாகுபாடின்றி ஐக்கிய தேசிய முன்னணி இன்று ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடாக வேட்பு மனுவை நாம் தாக்கல் செய்துள்ளோம். கடந்த 15 வருடங்களாக நல்ல பல பணிகளை நாடாளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் நான் முன்னெடுத்திருந்தேன். அதன் காரணமாக இன்று ஐக்கிய தேசியக்கட்சியின் முதன்மை வேட்பாளராகவும் போட்டியிடுகின்றேன்.

இதன் அடிப்படையில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஐக்கிய தேசிய முன்னணியின் வெற்றிக்காக பாடுபடுவோம் என்பதுடன் கூடுதலான ஆசனங்களை பெறுவோம். அதேவேளை கட்சி என்பது மார்க்கம் அல்ல. கட்சி மக்களுக்கு சேவை செய்வதற்காக இருக்கின்ற ஊடகம். அந்த வகையில் மகிந்த - மைத்திரி ஆகிய இருவருடனும் கடந்த காலங்களில் நானும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்டோம். இன்று மைத்திரிபால சிறிசேன அன்னச்சின்னத்தில் போட்டியிட்டு ஜனாதிபதியாகத்தெரிவு செய்யப்பட்டார்.

அதேபோல் மகிந்த ராஜபக்ஷ இன்று அவருடைய கட்சியில் போய் பிரதம வேட்பாளராக போட்டியிடுகின்றார். மைத்திரிபாலவின் வெற்றிக்கு பாடுபட்ட ரணில், நான், ராஜித இன்னும் பலர் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஐக்கிய தேசியக்கட்சியில் போட்டியிடுகின்றோம்.

ஐக்கிய தேசிய முன்னணி நாடளாவிய ரீதியில் பாரிய வெற்றியை ஈட்டும் வாய்ப்பு தென்படுகின்றது. இந்த நாட்டுக்கு நல்ல சேவைகளையும் ஊழலற்ற நேர்மையான இன மத பேதமற்ற நல்ல ஆட்சியையும் அதேபோல் இந்த வன்னி மாவட்டத்தில் கடந்த 15 வருடங்களாக பலவேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளோம். அதேபோல் இடைநடுவில் உள்ள பல திட்டங்களையும் தொடர்ந்தும் முன்னெடுப்போம்.

அதேபோல் அதிகமான வேலை வாய்ப்புக்கள் உட்பட வன்னி பிரதே சத்தில் உள்ள அனைத்து வீடற்றவர்களுக்கும் வீடுகளை வழங்குவதற்கு ஏற்பாடுகளையும் மேற்கொள்வோம் எனத்தெரிவித்தார்.

# காஷ்மீர் விவகாரம் இல்லையெனில் இந்தியாவுடன் பேச்சு நடக்காது


## – பாகிஸ்தான் திட்டவட்ட அறிவிப்பு –

காஷ்மீர் விவகாரம் இடம் பெறாவிட்டால் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடைபெறாது என பாகிஸ்தான் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய பாகிஸ்தான் பிரதமரின் வெளியுறவுத்துறை ஆலோசகர் சர்தாஜ் அஜீஸ், இந்தியா “ பாகிஸ்தான் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தை அட்டவணையில் காஷ்மீர் விவகாரம் முக்கிய இடம் பெற வேண்டும் என்றும், இந்த பிரச்சினையை விலக்கி விட்டு பேச்சுவார்த்தை நடைபெற்றால் அதில் பாகிஸ்தான் கலந்து கொள்ளாது எனவும் தெரிவித்தார்.

மும்பை தாக்குதல் சம்பவத்தில் கூடுதல் தகவல்கள் மற்றும் ஆதாரங்களை இந்தியா வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். மேலும் ரஷ்யாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது சம்ஜயுதா ரயில் குண்டு வெடிப்பு நிகழ்வு குறித்து தகவல்களை வழங்குமாறு நரேந்திர மோடியிடம், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கேட்டதாகவும் சர்தாஜ் அஜீஸ் தெரிவித்தார்.

இரு தலைவர்கள் இடையேயான பேச்சுவார்த்தை அமைதியை ஏற்படுத்துவதற்கான நல்ல அறிகுறி என்றும், இது தெற்காசிய பிராந்தியத்தில் நிலவும்



பதற்றத்தை தணிக்க உதவும் என்றும் சர்தாஜ் அஜீஸ் தெரிவித்தார்.

# பழம்பெரும் இசையமைப்பாளர் விஸ்வநாதன் காலமானார்



தமிழ்நாட்டின் பழம்பெரும் இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதன் தனது 87 ஆவது வயதில் நேற்று காலமானார்.

உடல் நலக் குறைவால் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை 4.30 மணிக்கு உயிரிழந்தார்.

இவர் இதுவரை 1200 திரைப்படங்களுக்கு இசை அமைத்துள்ளார். ராமமூர்த்தியுடன் இணைந்து 700 படங்களுக்கும் தனியாக 500 படங்களுக்கும் இசை அமைத்துள்ளார்.

தமிழ்த் தாய் வாழ்த்துப்பாடலான நீராரும் கடலுடுத்த பாடலுக்கு இசையமைத்த பெருமைக்குரியவர்.

அன்னாரின் பூதவுடல் சென்னை சாந்தோமில் உள்ள அவரது இல்லத்தில் திரையுலகினர் மற்றும் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளதுடன் இறுதிக் கிரியைகள் இன்று புதன்கிழமை இடம்பெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

### அந்நிய செலாவணி முறைகேடு

# விஜய் மல்லையாவிற்கு பத்து இலட்சம் அபராதம்



(டில்லி)

அந்நியச் செலாவணி முறைகேடு தொடர்பாக தம் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க தடை கோரி தொழிலதிபர் விஜய் மல்லையா தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீதிபதி ஜே.எஸ்.கேஹார் தலைமையிலான அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், இந்த வழக்கு தொடர்பான செலவுக்காக ரூ.10 இலட்சம் அபராதமாக செலுத்து மாறும் மல்லையாவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்நிலையில் முன்னதாக, டில்லி உயர் நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக விஜய் மல்லையா உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு தொடர்பாக விளக்கம் கோரி அமுலாக்கப் பிரிவுக்கு மனு ஒன்று அனுப்பப்பட்டிருந்தது.

இதற்குப் பதிலளித்த அமுலாக்கப் பிரிவு, விஜய் மல்லையா தனது கிங்பிஷர் பிராண்ட் மதுபானங்களை வெளிநாடுகளில் விளம்பரப்படுத்துவதற்காக நிதி ஏற்பாடு செய்ததில் பெரா விதிமுறைகளை மீறியதாக தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, 1995 இல் லண்டனை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் பெனட்டன் பார்முலா நிறுவனத்துடன் கிங்பிஷர் மதுபான விளம்பரத்துக்காக போடப்பட்ட ஒப்பந்தத்தில் மத்திய வங்கியின் அந்நியச் செலாவணி விதிமுறைகளை பின்பற்றவில்லை எனவும் குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# அன்பர் மாகாணத்தை கைப்பற்ற ஈராக் படைநடவடிக்கை ஆரம்பம்



ஐ.எஸ். ஆயுததாரிகளிடம் இருந்து அன்பர் மாகாணத்தை மீளக் கைப்பற்றும் பாரிய படை நடவடிக்கையை ஈராக்கிய படையினர் ஆரம்பித்துள்ளனர்.

ஆயுததாரிகளிடம் இருந்து கடுமையான எதிர்ப்பை ஈராக்கிய படையினர் இதன்போது எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

படையினரின் முன்னேற்றத்தை தடுக்கும் வகையில் ஐ.எஸ். ஆயுததாரிகள் ஐந்து தற்கொலைகார்க் குண்டுகள் மற்றும் ரொக்கெட்டுக்களை நிலை நிறுத்தியுள்ளதாக ஈராக்கிய படையினர் கூறியுள்ளனர்.

அன்பர் மாகாணத்தின் தலைநகரான ரமாடியை . ஆயுததாரிகள் கைப்பற்றி இரண்டு மாதங்களின் பின்னர் இந்த படை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஈராக்கிய இராணுவத்தினர், ஷியா பிரிவு ஆயுததாரிகள், விஷேட படையினர், பொலிஸார் மற்றும் சுன்னிப் பிரிவு பழங்குடியினத்தவர்கள் ஆகியோர் இணைந்து இந்தத் தாக்குதல் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

தலைநகர் ரமாடியை மீளக் கைப்பற்றுவதற்கு முன்னுரிமை அளித்தே அன்பர் மாகாணத்தின் மீதான தாக்குதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஈராக் அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தது.

எனினும் தற்போது அன்பர் மாகாணத்தின் பலூஜா நகரை இலக்கு வைத்து இந்த தாக்குதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஈராக் அரசாங்கம் கூறியுள்ளது.

ஈராக்கில் பலூஜா நகரையே முதல் முறையாக ஆயுததாரிகள் கடந்த ஆண்டு கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# வீட்டுத்தொகுதி இடிந்தது; 23 ரஷ்ய இராணுவத்தினர் பலி



(ரஷ்யா)

ரஷ்ய இராணுவத்தினர் தங்கியிருந்த வீட்டுத் தொகுதியின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்ததில் 23 படையினர் பலியாகியுள்ளனர்.

ஓம்ஸ்க் நகரிலுள்ள நான்கு மாடிகளைக் கொண்ட குறித்த கட்டடம் நள்ளிரவு வேளை இடிந்து வீழ்ந்துள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இடிபாடுகளுக்குள் இருந்து 19 படையினர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதுடன் ஐவர் காணாமற் போயுள்ளனர்.

கடுமையான காயங்களுடன் மீட்கப்பட்ட அவர்கள் தலைநகர் மொஸ்கோவிலுள்ள வைத்தியசாலைக்கு சிகிச்சைகளுக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பதில் 300 இற்கும் அதிகமான படையினர் குறித்த கட்டடத்தில் தங்கியிருந்ததாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறித்த கட்டடம் ஒரு வருடத்திற்கு முன்னரே புனரமைக்கப்பட்டதுடன் தரமற்ற புனரமைப்பே இந்த கட்டடம் இடிந்து விழக் காரணம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

அலட்சியம் காரணமாக இந்த சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்ற அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டீன் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

# ஈரான் அணுத்திட்ட உடன்பாடு பேச்சுவார்த்தையில் முன்னேற்றம்

(வோஷிங்டன்)

ஈரானின் சர்ச்சைக்குரிய அணுத்திட்ட உடன்படிக்கையை எட்டும் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது

எவ்வாறாயினும் வியட்நாமில் நடைபெறுகின்ற இது தொடர்பான பேச்சுவார்த்தையில் சில விடயங்கள் தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் உள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய அணுத்திட்டச் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்குடன் உலகில் அதிகாரம் மிக்க ஆறு நாடுகளும் ஈரானும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன.

சில பொருளாதார தடைகளை தளர்த்துவதற்கு பதிலாக அணுச் செயற்பாடுகளை குறைத்துக் கொள்வதற்கு ஈரான் இணங்கும் என வெள்ளை மாளிகை கூறியுள்ளது.

உடன்படிக்கை எட்டுவதற்கான இறுதியாக காலக்கெடு நேற்றுமுன்தினம் நள்ளிரவு நிறைவடைந்துள்ள நிலையில் எந்தவொரு அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

இதேவேளை ஆறு நாடுகளின் பிரதிநிதிகளுடன் ஆக்கபூர்வமான சந்திப்பை ஈரான் நடத்தவுள்ளதாக ஈரானின் ஊடக நிறுவனமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# வீணைச் சின்னத்தில் களம் குதிக்கிறோம் எங்கள் சேவை தொடர உங்கள் ஆதரவு தேவை

## ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சொந்தச் சின்னத்தில் போட்டியிட வேண்டுமென்ற மக்களின் விருப்புக்கு மதிப்பளித்து இம்முறை பொதுத் தேர்தலை வீணைச் சின்னத்தில் எதிர்கொள்வதாக முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கலை அடுத்து யாழ்.கிறீன் கிறாஸ் ஹோட்டலில் ஊடகவியலாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமது கட்சியின் தேர்தல் நிலைப்பாடுகள் முன்னெடுப்புகளை ஊடகவிலாளர்களுக்கு விளக்கி உரையாற்றிய முன்னாள் அமைச்சர் மேலும் தனது உரையில்,

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது கட்சியின் அரசியல் நிலைப்பாட்டுக்கு அமைவாக இம்முறை தேர்தலில் 5 தேர்தல் மாவட்டங்களில் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளோம்.

கடந்த 60 ஆண்டுகளாக தமது வாக்கு வங்கிக்கு வசதியாக தமிழ் மக்களை இனவாத சாயம் பூசி ஏமாற்றிவந்த அரசியல் தலைமைத்துவம் இம்முறை தேர்தலோடு முடிவுக்குக்கொண்டுவர வேண்டும் என்பதில் நாம் உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளோம்.

நீண்டகாலமாக இழுபறியில் இருந்துவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை கண்டு எமது மக்களின் வாழ்வில் நீடித்த அமைதியான சுபீட்சமான வாழ்வை பெற்றுக் கொடுப்பதற்கு பதில் இந்த தமிழ் தலைவர்கள் இதனை தீராப்பிரச்சினையாக்கி தொடர்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பதை அவர்களது கடந்த கால அரசியல் முன்னெடுப்புகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. நீண்ட போரில் இடப்பெயர்வுக்குள்ளான எமது மக்களை மீளக்குடியமர்த்தல் என்கிற எமது தொடர் முயற்சியில் இதுவரை ஆயிரக்கணக்கான நிலங்களை நாம் மீட்டு அந்த மக்கள் இயல்பு வாழ்வை தொடர்வதற்கான அடிப்படை வசதிகளை நாம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

அவ்வாறே தொடரும் புதிய ஆட்சி நிர்வாகத்தில் சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாதிருக்கும் மீதியாகவுள்ள மக்களையும் மீளக் குடியமர்த்த எம்மாலான முயற்சிகளை தொடர்வோம் என்பதையும் இவ்விடத்தில் உறுதியாக கூறிவைகக விரும்புகிறேன்.

போர்ச் சுழலில் காணாமற்போனோர் மற்றும் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் எதிர்கொள்ளும் மன நெருக்கடிகள், பாதிப்புக்களை நாம் நன்கறிவோம்.

இறுதிப்போரின் முடிவுக்குப்பிறகு புதிய அரசில் காணாமற்போனோரை கண்டறிவதற்கான ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் பாதிக்கப்பட்டுள்ள உறவினர்களுக்கு உரிய இழப்பீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டுமென்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

இதனிடையே தெற்கிலும், கிழக்கிலும் சில இரகசிய முகாம்கள் இருப்பதாகவும் இதற்கு தம்மிடம் ஆதாரம் இருப்பதாகவும் தமிழ் கூட்டமைப்பபின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறிவருகின்றனர்.

ஆனால் இதுபற்றி நாம் நாடாளுமன்றத்தில் வினவியபோது இச்செய்தி முற்றிலும் பொய்யான செய்தியென எமக்கு பதிலளிக்கப்பட்டிருக்கிறது.

இரகசிய முகாம்கள் இருப்பதற்கு தம்மிடம் ஆதாரம் இருப்பதாக கூறியவர்களிடம் இந்த ஆதாரங்களை வெளிப்படுத்தி உறுதிப்படுத்துமாறு நாம் கோருகிறோம். அப்போதுதான் அதன் உண்மைத் தன்மையை வெளிக்கொணர முடியும் என நாம் நம்புகிறோம்.

அடுத்து தமிழ் மக்களின் நிரந்தர சொத்தாக என்றுமே இருந்துவரும் கல்வியை மேலும் திறம்பட முன்னெடுக்கும் வகையில் கல்வி, தொழிற் கல்வி, பட்டப்படிப்புக்கான கல்வி என்கிற அடிப்படையில் திட்டங்களை புதிய அரசில் மேலும் விரிவுபடுத்தி நாம் முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்.

யுத்தத்தால் வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்த மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகளை நாம் கவனத்திலெடுத்திருக்கிறோம்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்திலிருந்தே இவர்கள் தமது சொந்த மண்ணுக்கு மீண்டும் திரும்பி தமது இயல்புவாழ்வை தொடரவும் தமக்கான அரசியல் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான ஏற்பாடாக அவர்களுக்கான வாக்குரிமையை வழங்க வேண்டுமென்பதிலும் நாம் உறுதியாக உள்ளோம்.

அவ்வாறே இவர்கள் புதிய தொழில் முதலீடுகளை ஆரம்பிக்கவும் சொத்துக்களை ஈட்டி தமது வாழ்வை முறையாக நிலைப்படுத்திக் கொள்வதற்கான வழிவகைகளும் அவர்களுக்கு செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

கூடுதலான இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் வகையில் எமது சூழலில் காணப்படும் சொந்த வளங்களை பயன்படுத்தி புதிய ஆலை மயப்பட்ட புதிய உற்பத்தி முயற்சிகளை இனங்கண்டு நடைமுறைப்படுத்துவது எமது பிரதான இலக்காக உள்ளதையும் இவ்விடத்தில் கூறிவைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக விவசாயம், கடற்றொழில் சார்ந்து புதிய கைத்தொழில் முயற்சிகளை இனங்காண்பதோடு பனை உற்பத்தி மற்றும் பழச் செய்கையை மேலும் விஸ்தரிப்பதன் மூலம் இதனை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவும் திட்டங்களை வகுத்துள்ளோம்.

தமது குறுகிய அரசியல் நோக்கங்களால் மக்கள் மத்தியில் தம்மைத்தாமே மறுதலித்துக்கொண்டுள்ள சிலர் தமது இயலாமையை வெளிப்படுத்த முடியாது இதுதான் எமக்கு கடைசிகாலம் என்பதாக எம்மீது அவதூறு பிரசாரங்களை மேற்கொள்வதன் மூலம் தம்மை நிலை நிறுத்தி கொள்ள முயல்கின்றனர்.

இவ்வாறு கூறி அரசியல் செய்ய முயல்பவர்களுக்கு இந்த தேர்தல் முதலும் இறுதியுமான சந்தர்ப்பம் என்பதையும் இவ்விடத்தில் நான் கூறிவைக்க விரும்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## குடும்பஸ்தரை காணவில்லை

கைபேசிக்கு வந்த அழைப்பை ஏற்றுச் சென்ற இளம்குடும்பஸ்தரைக் கடந்த நான்கு நாட்களாகக் காணவில்லை என சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - மல்லாகத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சிவராம் (வயது - 34) என்பவரே இவ்வாறு காணாமற்போனவராவார்.

கே.கே.எஸ். வீதி மல்லாகத்தில் தொலைத் தொடர்பு நிலையம் வைத்திருக்கும் குறித்த நபர் கடந்த சனிக்கிழமை கடையில் வேலை செய்து கொண்டு இருந்துள்ளார். அச்சமயம் அவரது கைபேசிக்கு அழைப்பு ஒன்று வந்ததாகவும் அதற்குப் பதிலளித்தவாறு தனது மோட்டார் சைக்கிளில் குறித்த நபர் அங்கிருந்து சென்றுள்ளார். நீண்ட நேரமாக அவரைக் காணாததால் அவரைத் தொடர்பு கொண்டபோது அவரின் தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்த முடியவில்லை எனத்தெரிவிக்கப்படுகின்றது. இந்த விடயம் குறித்து அவரின் குடும்பத்தினர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

### இந்திய...

சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தாக்குதல் சம்பவம் குறித்து கடற்றொழில் அதிகாரிகளிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த தாக்குதலை மேற்கொண்டவர்கள் இலங்கையர்கள் என்று அந்த முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. அவர்கள் மீன்பிடிப்பதற்காக பயன்படுத்திய வள்ளங்களுக்கும் சேதங்களை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

### இரகசிய...

இவர்களிடம் இருக்கிறதா என்று விசாரணை செய்ய வேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பரிகாரம் அளிக்கப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

### மகிந்தவுக்கு...

காட்டித் தந்த முறைமையின் வடிவம் இப்படித்தான் இருக்கும். எனது 44 வருட அரசியல் வாழ்க்கையே என்னை பொது அபேட்சகராக நிறுத்தியதற்கு காரணமாகும். கட்சித் தலைவராக இருந்ததற்கும் சிலர் என்னை குறை சொன்னார்கள். ஆனால், நான் அந்தப் பதவியில் இருந்ததனால்தான் அரசின் முக்கிய வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுக்க முடிந்தது.

நான் நட்சத்திரம் பார்த்து எதிர்காலத்தைக் கணிப்பிடுவதில்லை. ஆனால், வரலாறு பார்த்து எதிர்காலம் பற்றி கணித்துச் சொல்ல முடியும். சுதந்திரக் கட்சியை இரண்டாகப் பிளக்கும் எண்ணமும் எனக்கில்லை.

கட்சியில் இருந்து கேட்டு விலகுவதற்கான தேவையும் எனக்கில்லை. அப்படி நான் கேட்டு விலகியிருந்தால் மகிந்தவுக்கு தேவையான விதத்தில் வேட்புமனுவில் ஆட்களை உள்வாங்கியிருப்பார். கட்சி எப்படிப் போனாலும், ஜனவரி 8ஆம் திகதி நான் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் நாடாளுமன்றொன்றே எனது தேவை.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டுவந்து, சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் ஊடாக மகிந்தவை நாடாளுமன்றம் கொண்டு வருவதற்கும் அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள்.

நான் அவர்களது சகல முயற்சிகளையும் முறியடித்தேன். மகிந்தவுடன் எனக்கு எதுவித கொடுக்கல் வாங்கல்களுமில்லை. அவருக்கு எனது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டின் பிரதமராக பிறிதொருவர் வருவதை மகிந்த தடுக்க முயல்கிறார். மகிந்த அணி வெற்றிபெற்றாலும், பிரதமர் பதவியில் அமர்த்துவதற்கு அக்கட்சியில் வேறு சிரேஷ்ட உறுப்பினர்கள் இருக்கிறார்கள். சவால்களுக்கு மத்தியில் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஜனநாயகத்தை நான் ஒருபோதும் தவறாக பயன்படுத்த மாட்டேன்.

பொதுத் தேர்தலை நீதியும் சுதந்திரமுமாக நடத்துவதற்கு நான் ஒத்துழைப்பேன். மகிந்தவுக்கு கூட்டமைப்பில் வேட்புமனு கொடுக்கப்படாதிருந்திருந்தாலும், அவர் பிறிதோர் கட்சியில் போட்டியிட்டிருப்பார்.

மத்திய வங்கியின் ஆளுநரைப் பதவி விலக்கினால் சிறப்பாக இருக்கும் என நான் ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறியிருக்கிறேன்.

எவரும் என்னை விமர்சனம் செய்யலாம். விமர்சனங்களை வரவேற்கிறேன். பொது மக்களாகிய நீங்கள் பெற்றுத் தந்த ஜனநாயகம் இது. இதனை சீர்குலைக்க முயல வேண்டாம் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## பம்பலப்பிட்டியில் மூவர் தற்கொலை

### ரயிலின் முன்னால் பாய்ந்து

(கொழும்பு)

பம்பலப்பிட்டிய பிரதேசத்தில் ஓடும் புகையிரதத்தின் முன்னால் பாய்ந்து 3 பேர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர்களில் 38 வயதுடைய ஒரு ஆணும் 33 வயதுடைய ஒரு பெண் மற்றும் ஒரு வயதுடைய குழந்தை ஒன்றும் அடங்குவதாகவும் இவர்கள் மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு பாணந்துறையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி வந்து கொண்டிருந்த புகையிரதத்திற்கு முன்னால் பாய்ந்து இவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

ஆண், பெண் இடையே காணப்பட்ட தகாத உறவே தற்கொலைக்கான காரணம் என்று தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். உயிரிழந்தவர்களின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# மக்களின் எதிர்பார்ப்பை மதிக்கத்தவறியது கூட்டமைப்பு

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குற்றச்சாட்டு



தமிழ் மக்களால் வழங்கப்பட்ட அரசியல் பலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் இன்றுவரை மக்களின் நலன்களுக்காக பயன் படுத்தப்படவில்லை அவை அனைத்தையும் அவர்களின் தனிப்பட்ட நலன்களுக்காக மட்டுமே பயன்படுத்தியுள்ளனர். என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார் இன்று சங்கத்தார்வயல் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

அரசியலே இன்று மனித வாழ்வின் அனைத்து விடயங்களையும் தீர்மானிக்கின்றது ஆனால் இதுவரை தமிழ் மக்களால் வழங்கப்பட்ட அரசியல் பலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பால் மக்களின் நலன்களுக்காக பயன் படுத்தப்படவில்லை அவை அனைத்தையும் அவர்கள் தமது தனிப்பட்ட நலன்களுக்காக மட்டுமே பயன்படுத்தியிருக்கின்றார்கள்.

சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் எனவே அவர்களிடமிருந்து எதனையும் பெறமாட்டோம் என்று கூறிக்கொண்டு மக்களுக்கு எவ்வித சேவையையும் செய்வதில்லை ஆனால் தமது குடும்பங்களின் நலன்களுக்கான உதவிகளைப் பெறவும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென்று வழங்கப்படும் மிகப் பெரும் வரப்பிரசாதங்களை பெற்றுக் கொள்வதற்கும் அவர்கள் மறுப்பதில்லை. என குறிப்பிட்ட அவர்

இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழ்மக்களின் சனத்தொகை இருபது இலட்சமாகவும் சிங்களவர்களின் சனத்தொகை இருநூறு இலட்சமாகவும் இருக்கின்ற நிலையில் தமிழர்கள் ஜனாதிபதியாக வருவதோ தமிழர் ஒருவர் பிரதமராக வருவதோ சாத்தியமற்றது அத்தோடு தொன்நூறு வீதமாக அமைச்சர்களும் சிங்களவர்களாகவே இருப்பார்கள் இந்நிலையில் எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதானால் உரியவர்களிடம் பேசியே தீர்வினைப் பெறமுடியும் எனவே குறிப்பிட்ட பிரச்சினைக்கு தீர்வு காணும் விடையத்தோடு தொடர்புபட்டவர் சிங்களவர்களாகவே இருப்பார் ஆகவே அவர்களுடன் பேசி தீர்வினைப் பெறவேண்டியது ஒரு மக்கள் பிரதிநிதியின் கடமை.

ஆனால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது தமிழ் சமூகத்திற்கு துடிப்புடன் பணியாற்றக் கூடிய இளம் தலைமுறையினரின் வரவே அவசியமாகின்றது ஏனெனில் இன்று சமூகத்தில் அதிக பிரச்சினைகளுடனும் தேவைகளுடனும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இளம் தலைமுறையினரே அவர்களால் மட்டும்மே இளைஞர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு சேவையாற்ற முடியும் ஆனால் தள்ளாத வயதை எட்டியிருக்கும் இவர்களால் இளைஞர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்வதென்பதும் சாத்தியமற்றதே.

எனினும் கடந்த பல தசாப்தங்களாக எமது மக்கள் வேறு தெரிவுகள் பற்றி சிந்திக்கவில்லை ஆனால் இன்று நிலைமைகள் மாறிவிட்டன அதிலும் இவ்வருடம் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன ஊடகங்கள் கூட செயற்திறனற்றவர்கள் என்ற விடையங் களை வெளிப்படையாகவே சுட்டிக் காட்டி வருகின்றன.

நேற்று முற்பகல் இயக்கச்சி சங்கத்தார் வயல் கிராமத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் அக்கிராமத்தின் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதிகள் கிராம அபிவிருத்தி சங்கத்தின பிரதிநிதிகள் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

# செல்வச்சந்நிதியில் சடலம் மீட்பு

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் வயதான பெண்ணின சடலம் நேற்றுக்காலை மீட்கப் பட்டுள்ளது.

வைத்தியலிங்கம் ஜெந்தினி (வயது-65) எனும் பெரையும் கம்பஹா மாவட்டம், கேரம்பிட்டி வத்தளை என தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப் பட்டுள்ள விபரங்களையுடைய பெண்ணின் சடலமே பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.


மந்திகை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள மூன்று நாட்களிற்குள் சடலம் பொறுப்பேற்காவிட்டால் அரச செலவில் அடக்கம் செய்யப்படும் என வல்வெட்டித் துறை மரணவிசாரணை அதிகாரி அறிவித்துள்ளார். (18)

# விசமிகளால் நொருங்கியது தச்சன் தோப்பு புகையிரத நிலையம்

தச்சன் தோப்பு புகையிரத நிலையம் நேற்று மாலை விசமிகளால் அடித்து நெருக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை கடமைக்காக வருகைதந்த உதவிப்புகையிரத நிலைய அதிபர் இதனைப்பார்வையிட்டுள்ளார். நிலையத்தின் கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்டுள்ளதுடன் போத்தல் மற்றும் இரத்தக்கறைகள் அவ்விடத்தில் காணப்பட்டதோடு இது தொடர்பாக அவர் சாவகச்சேரிப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளதோடு பொலிஸார் இதுதொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# அவுஸ்ரேலியாவிலிருந்து கறவை பசுக்கள் இறக்குமதி



(கொழும்பு)


பெருந்தொகையான அவுஸ்ரேலிய பசுக்கள் மாகம்புர அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

நேற்று இறக்குமதி செய்யப்பட்ட இக்கறவைப் பசுக்கள் இலங்கையின் பாலுற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தால் வரவழைக்கப் பட்டுள்ளன.

இவ்வாறுகொண்டுவரப்பட்ட சுமார் 1250 கறவை மாடுகள் அம்பாந்தோட்டை ரிதிகமவிலுள்ள அரச பண்ணையிடம் கையளிக்கப்பட்டது.



# விண்வெளியில் புரட்சி புளுட்டோவில் ஹொரைசன்ஸ்



நாசாவின் வரலாற்றுச் சாதனையாக நியூஹொசன்ஸ் (New Horizons ) என்ற விண்வெளி ஓடமொன்று நேற்று புளுட்டோ கிரகத்தை சென்றடைந்துள்ளது.

பூமியில் இருந்து அனுப்பபட்ட விண்வெளிஓடம் நேற்று முதல்முறையாக சூரிய மண்டலத்தில் மிகத்தொலைவில் சுற்றி வரும் புளுட்டோகிரகத்துக்கு அருகே பயணிக்கின்றது.

மணிக்கு சுமார் 30 ஆயிரத்து 800 மைல் வேகத்தில் பயணிக்கும் நியூஹொசன்ஸ் எனும் விண்கலம் புளுட்டோவின் மிக நெருக்கமான புகைப்படங்களை பூமிக்கு அனுப்பவுள்ளது. எனினும் அந்த புகைப்படங்கள் பூமியை வந்தடைவதற்கு 13 மணித்தியாலங்கள் செல்லும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் புளுட்டோ கிரகத்தை கண்டுபிடித்த விஞ்ஞானியான கிலைடி ரொம்போக்வின் அஸ்தியும் நியூஹொசன்ஸ் விண்கலத்தில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. குறித்த விஞ்ஞானிக்கு கௌரவத்தை வழங்கும் நோக்கில் இந்த அஸ்தி அனுப்பப்பட்டுள்ளது.


இன்றைய தினம் Google Logo இன்னை நியூஹொசன்ஸ் விண்கலம் அனுப்பப்பட்டதனை நினைவுபடுத்துவதாக மாற்றியது.


# விபசார விடுதி சுற்றிவளைப்பு சந்தேகநபருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகரில் இயங்கிவந்த விபசாரவிடுதி சுற்றிவளைக்கப்பட்டு உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட போது சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

நீதவானுக்கு பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இவ்விடுதி நிலை சுற்றிவளைக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு விடுத்த உத்தரவையடுத்து இக்கைது இடம் பெற்றுள்ளதோடு குறித்த சந்தேக நபரை இம்மாதம் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (18)





மண்டைதீவு முகப்புவயல் முருகன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்ற போது...

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.